www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

KANNODDAM

வெளியீடு-64 | 10 நவம்பர் 2012 | விலை 10.00

# 13 ஆவதின் முக்கியத்துவம்

**புலிகளை தோற்கடித்ததுடன் இனப்பிரச்சினை முடிவடைந்துவிட்டது என்ற அகங்கார நிலைப்பாட்டிற்கு பேரினவாதிகள் சென்றுள்ளார்கள். இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் இலங்கையில் அமைதி இழந்து வருவது துரதிஸ்டமான உண்மை. 13ஆவது திருத்தத்தை இலங்கையின் அரசியலமைப்பில் இருந்து அகற்றுவதன் மூலம் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம். உண்மையில் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பாலும் சென்று அதிகாரங்களை பகிர்வதே முறையாகும்.**

13 வதையும் இலங்கையின் அரசியலமைப்பில் இல்லாமல் செய்யவேண்டும் என்ற போக்கு விபரீதமானது. இந்தப் போக்கு இன்று அரச மட்டத்தில் தீவிரவாத சத்திகளால் வலியுறுத்தப படுகிறது. இது அனுமதிக்கவும் பட்டுள்ளது.

மாகாணசபைகளின் அதிகாரங்களை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தினால் நீதிததுறையின் தலை எழுத்தையே மாற்றும் அளவிற்கு விபரீதமான போக்குகள் தலை தூக்கியுள்ளன. அண்மையில் ''திவிநகும'' சட்டமூலம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இலங்கையின் இரண்டு சட்டவாக்க சபைகள் இருப்பதை உறுதிப்படுதியுள்ளது. இது பேரினவாத சத்திகளை பரபரப்படைய வைத்துள்ளது.

பேரினவாத ஆளும் வர்க்க சத்திகள் சிறுபான்மை சமூகங்களுக்கோ அல்லது சமுதாய ஏணியின் கிழ் அடுக்கில் வாழ்பவர்களுக்கோ அதிகாரங்கள் செல்வதை தொடர்ச்சியாக பிடிவாதமாக மறுதலித்து வருகின்றன.

இது தான் இலங்கையில் தொடர்ந்து நிலவும் ஜனநாயகமயப்படுத்தல் தொடர்பான பிரச்சனை இலங்கை மாதிரி ஒரு சிறிய நாட்டிற்கு அதிகாரப்பரவலாக்கல் பொருத்தமானதல்ல என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது.

மறுபுறம் உள்ளூராட்சிசபை மட்டத்தில் அதிகாரங்கள் வழங்குவதே பொருத்தமானதென சொல்லப்படுகிறது.

அதிகாரங்களை மத்தியில் மாத்திரம் வைத்திருப்பதற்கு அதற்கும் மேல் ஒரு சிறிய குழுவிடம் வைத்திருப்பதற்கான அவதந்திரமே இந்தக்கதை .''திவிநகும'' என்பதே அதுதான். ஏனெனில் உள்ளூராட்சி மட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிகாரங்களை பகிர முடியாது .

.சமுர்த்தி, தென்பிராந்திய, மத்தியமலைநாட்டு அபிவிருத்தி அதற்கான நிதி ஆதாரங்கள் அத்தனையையும் மத்தியில் ஒரு அமைச்சரின் கையில் விடுவிப்பது.

புலிகளைத் தோற்கடித்ததுடன் இனப்பிரச்சனை முடிவடைந்துவிட்டது என்ற அகங்கார நிலைப்பாட்டிற்கு பேரினவாதிகள் சென்றுள்ளார்கள். 60 ஆண்டுகளுக்கு மேலாக நிலவும் ஒரு பிரச்சனையை வெவ்வேறு காலங்களில் பல்வேறு தீர்வுகள் முன்வைக்கப்பட்ட வரலாற்றை ஒரேயடியாக நிராகரிக்கும் இந்த போக்கு உண்மையில் இனப்பிரச்சனை தொடர்பான பாசிசப் போக்காகும். இந்த போக்கிற்கெதிரான, தடுத்து நிறுத்துவதற்கான தலையீடு அவசியமானது.

உள்நாட்டில் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்பது சரிதான். ஆனால் இனப்பிரச்சனை ஒன்றே இல்லை. புலிகள் தோற்கடிக்கபட்டதுடன் இனப்பிரச்சனை:கும் தீர்வு காணப்பட்டுவிட்டது என்ற யுத்த வெற்றியின் அடிப்படையிலான பேரினவாதப் போக்கிற்கெதிராக இந்தியா உட்பட சர்வதேச தலையீடு அவசியம்.

நீதித்துறையின் சுயாதீனததிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கும் இது பொருந்தும்.

நாட்டு மக்களின் விழிப்புணர்வும் இதே அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

மிகையான, கற்பிதமான ஜேர்மன் தேசியம், யூத மற்றும் சிறுபான்மை தேசிய சமூகங்களுக்கு விழைவித்த நாசம் ஒரு வரலாற்றுப் படிப்பினை.

இன மத சிறுபான்மைச் சமூகங்கள் இலங்கையில் அமைதி இழந்து வருவது துரதிஸ்டமான உண்மை

13 வதை இலங்கையின் அரசியலமைப்பில் இருந்து அகற்றுவதன் மூலம் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம்.உண்மையில் 13வது

(தொடர்ச்சி 3 ம் பக்கம் பார்க்க)

## தோழர் பத்மநாபா பிறந்த நாள்

**நவம்பர் 19**



**அமரர், தோழர் பத்மநாபா 19.11.1957 இல் பிறந்தவர் சமூகத்தின் மேம்பாட்டுக்காக வாழ்ந்தவர். அவர் மக்களின் விடிவிற்காக ஆற்றிய அரும்பணிகளை எண்ணிப் பார்க்கவும் அதன் வழி நடக்கவும் அவரது நினைவுகள் எமக்கு ஊக்கம் தருவனவாகும்.**

**தோழர் பத்மநாபாவின் வரலாறு தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது. தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், இனங்களிடையே நல்லிணக்கத்திற்காகவும், சமூக மாற்றத்துக்காகவும் போராடியவர் அவர். வர்க்க ரீதியாகவும், சாதி ரீதியாகவும், பெண்கள் என்ற ரீதியிலும் ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்களின் மீட்சிக்காக உழைத்தவர்.**

(தொடர்ச்சி 9 ம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் கண்டுகொள்ளாத ஆதரவும் உயர்த்திப் பிடிக்கும் எதிர்ப்பும்



மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய இடதுசாரி கட்சிகள் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசியலமைப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என முன்னெடுக்கப்பட்டு வரும் பிரச்சாரத்துக்கு தமது எதிர்ப்பினை தெரிவித்துள்ளன. இதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்தும் எச்சரிக்கை விடுத்துள்ளன். இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியாக இந்திய இலங்கை அரசாங்கஙகங்கள் 1987 இல் செய்து கொண்ட ஒப்பந்தத்தினை அடுத்து இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்தில் 13வது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. 13 வது திருத்தத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் விசேடமாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கு தீர்வு காண முடியும் எனவும் நம்பப்பட்டது. 13 வது திருத்தச் சட்டத்தின் உருவாக்கத்திலும் அதன் அமுலாக்கத்திலும் குறைபாடுகள் இருப்பது அனுபவத்தில் கண்டறியப்பட்ட போதும் இன்று வரை இந்த நம்பிக்கை நீடித்து வருகின்றது.

13 வது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கி மேலும் உள்ளடக்கப்பட வேண்டிய திருத்தங்களை உள்ளடக்கி உருவாக்கப்படும் 13 பிளஸ் மூலம் இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் சமத்துவம், சகோதரத்துவத்தோடு வாழ முடியும் என்ற கருத்து இன்னும் வலுவானதாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை மீது யுத்தக் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 13 வது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வினை வழங்கத் தயாராயுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அறிக்கை ஒன்றை

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)

## திவிநெகும: யாருடைய வாழ்வின் எழுச்சி

இலங்கை சமூர்த்தி அதிகார சபை, தென்மா காண அபிவிருத்தி அதிகார சபை, உடரட்ட அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றை உள்ளடக்கி திவிநெகும (வாழ்வின் எழுச்சி) திட்டம் மஹிந்த சிந்தனையின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

சந்திரிகா குமாரணதுங்காவின் ஆட்சிக்காலத்தில் வருமானம் குறைந்த குடும்பங்கள், வறுமை நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் வறுமை ஒழிப்பு திட்டமாக சமுர்த்தி திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் வேலையற்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டதுடன், வருமானம் குறைந்த குடும்பங்களின் அங்கத்தவர்களை குழுக்களாக ஒன்றிணைத்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அவர்களே தீர்வு காணும் பண்பை வளர்ப்பதும் அவர்களுக்கு சமுர்த்தி வங்கிகள் ஊடாக சேமிக்கும் பழக்கத்தை பயிற்றுவிப்பதுடன் அவர்கள் சுயமாக மேற்கொள்ளக்கூடிய விவசாயம், விலங்கு வேளாண்மை, சிறிய கைத்தொழில் முயற்சிகளுக்கான கடன்களை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் இத் திட்டத்தின் குறிக்கோள்களாகும். சமூர்த்தி வங்கிகளில் கடன் பெறுவதற்கு ஏனைய வங்கிகள் போன்று ஆதனங்களோ, அரசாங்க ஊழியர்களின் பிணையோ அவசியமில்லை. சமூர்த்தி குழுக்களில உள்ள அங்கத்தவர் ஒருவரே மற்றொரு அங்கத்தவருக்கு பிணையாளாக நின்று கடன் பெற முடியும்.

மஹிந்த சிந்தனை பிரகடனத்தின் மூலம் ஜனாதிபதி தேர்தலில் வாக்குறுதியளித்தபடி சமுர்த்தி நன்மை பெறுபவர்களுக்கும், சமூர்த்தி ஊழியர்களுக்கும் மேலும் நன்மைகளை அதிகரிப்பதற்காக திவிநெகும திட்டம் வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் வெவ்வேறு நிறுவனங்களால் மேற் கொள்ளப்பட்ட ஒரே விதமான பணிகளை திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் என்ற

(தொடர்ச்சி 3 ம் பக்கம் பார்க்க)


மக்களின் விடிவிற்காக வீ.ஏ.கந்தசாமி



பக்கம்- 03

கூட்டமைப்பை பதிவுசெய்ய வேண்டும்



பக்கம்- 04

அபிமன்யு பதில்கள்

பக்கம்- 05

சம்பந்தர் ஐயா சாதிப்பாரா?



பக்கம்- 06

தோழர்களை நினைவு கூருவோம்



பக்கம்- 08


படிப்பகம்

www.padippakam.com



கண்ணோட்டம்
KANNODDAM



# யுத்தம் முடிவடைந்தும் தொடரும் பயங்கரவாதம்

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் மழை விட்டும் தூவானம் விடவில்லை என்ற கதையாக மிரட்டல்கள், கடத்தல்கள், படுகொலைகள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. புலிகளின் பயங்கரவாதத்திலிருந்து மக்களை விடுவிக்க மனிதாபிமான யுத்தத்தை நடாத்தியதாக கூறும் இலங்கை அரசு புலிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்ட போதும் இன்றும் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியிருக்கும் பயங்கரவாத நடவடிக்கைளிலிருந்து மக்களைக் காக்க தவறிவருகின்றது.

இனந்தெரியாதவர்களால் மிரட்டப்படுவதும், தாக்கப்படுவதும், காணாமற் போவதும், கடத்தப்படுவதும், கடத்திப் படுகொலை செய்யப்படுவதும் முடிவுக்குவருவதாயில்லை. இந்தகைய பயங்கரவாத வன்முறைகள் நடைபெற்ற இடங்களில் விசாரணைகளை நடாத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தியதாக சம்பவம் எதனையும் குறிப்பிடப் கூடியதாயுமில்லை.

உடுவிலில் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் திறப்பை தம் வசமாக்கிக் கொள்வதற்கு நடைபெற்ற இழுபறியை தொடர்ந்து ஒப்பந்தகாரர் கட்டிடத்தின் திறப்பை பிரதேசசபை தலைவரிடம் ஒப்படைத்தார், சபைத்தலைவர் சபை முடிவின் படி எளிமையாக திறப்புவிழாவை நடாத்தி புதிய கட்டிடத்தில் சபை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகளை செய்திருந்த வேளையில் திறப்புவிழாவிற்கு முதல் நாள் இரவு கட்டிடத்திற்கு ஓயில் ஊற்றப்பட்டது.

நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான காணியை இராணுவம் அடாத்தாக கையகப்படுத்திவிட்டதாக குற்றம்சாட்டி இதுகுறித்து முறைப்பாடு செய்வதற்கு காணி உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. வசந்தகுமார் திரும்பிவரும் வழியில் இனந்தெரி யாதவர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

காணாமல் போனவர்கள் பற்றிய உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டுமென போராடிய இருவர் கடந்த டிசம்பரில் யாழ்ப்பாணத்திலிருந்து காணாமல் போயுள்ளனர்.

சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் தலைவி திமுது ஆட்டிக்கலவின் வாகனத்தின் மீது கழிவு எண்ணை வீசி தாக்குதல் நடாத்தப்பட்டது. நல்லூர் கோவிலுக்கு சமீபமாக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

கல்கிசையில் மேல் நீதிமன்ற நீதிபதியும், நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருமாகிய மஞ்சுளா திலகரட்ணா இனந் தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

அரசாங்கத்தை விமர்சித்து எழுதி வந்த பத்திரிகையாளரும் கார்டூன் ஓவியருமான பிரகீத் ஏக்நலிகொட காணாமல் போய் ஆயிரம் நாட்கள் ஆகிவிட்டதை சுட்டிக்காட்டி காணாமற் போனவர்களின் குடும்பத்தவர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். ஆட்கள் காணாமல் போகும் அவலம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கைகளில் ஒன்றாயிருந்தது.

இந்த சம்பவங்கள் மக்களின் பாதுகாப்பை, உரிமைகளை கேள்விக்கிடமாக்கியுள்ளன. இவை கண்டனத்துக்குரியவை மட்டுமல்ல இது போன்ற பயங்கரவாதம், வன்முறைகள் இந்த நாட்டில் முடிவுக்கு வரவேண்டும் என்பது இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களதும் ஆசை அக்கறை ஆகும். இதற்காக அனைத்து இன மக்களும் உயிர் தியாகங்கள் புரிந்தும், உடமைகளை இழந்தும் மிகப்பெரும் விலையை செலுத்தியுள்ளனர்.

இப்போது இடம்பெறும் வன்செயல்களில் தமக்கு தொடர்பில்லை என்பதை நாட்டு மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டியதும், தமக்கு தொடர்பில்லாவிடினும் சட்டம் ஒழுங்குக்கு பாதுகாப்புக்கு பொறுப்பானவர்கள் என்ற வகையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கண்டு பிடித்துச் தண்டிக்க வேண்டிய பொறுப்பு, மக்களுக்கு நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு, அரச படைகளுக்கே உண்டென்பதை நிராகரித்துவிட முடியாது.

# புதிய பண்பாட்டுத் தளம்

## சமூக மாற்றத்தை வேண்டி நிற்பவர்களின் வெகுஜன அமைப்பு

**இந்த அமைப்பு, சமூக மாற்றத்துக்காக உழைக்கும் எந்தவொரு கட்சிக்கும் சார்பானதோ எதிரானதோ இல்லை. அந்தவகையில் எந்தக் கட்சியிலும் உள்ள ஒருவர் தனது கட்சிக்குரிய அமைப்பாக்கும் நோக்கம் இல்லாமல், தனது கட்சிக்கு விரோதமாயல்லாத வெகுஜன செயற்களங்களில் எம்மோடு சேர்ந்து இயங்க இயலும்.**

நம் மத்தியில் சமூக மாற்றத்துக்காக உழைக்கும் அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் கலை-இலக்கிய அமைப்புக்களை சேர்ந்தவர்கள் பலரையும் ஐக்கியப்பட்டு செயற்பட வைக்கும் நோக்குடன் புதிய பண்பாட்டுத் தளம் எனப்படும் புதிய பண்பாடடுக்கான வெகுஜன அமைப்பு ஒன்றை தோற்றுவிக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு அக்டோபர் 13ம் திகதி ஹட்டன் நகரில் நடைபெற்றது. மலையகம் மற்றும் வடக்கு, கிழக்கை சேர்ந்த அரசியல், சமூக ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர். தீர்த்தக்கரை சஞ்சிகையின் ஆசிரியர் சாந்திகுமார், இடதுசாரி பாரம்பரியம் கொண்ட அரசியல் செயற்பாட்டாளரான கே.சுப்பையா, அரசியல் செயற்பாட்டாளரும் கலை இலக்கிய கர்த்தாவுமான நீர்வை பொன்னையன், தோழர் சுகு ஸ்ரீதரன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சமூக மாற்றத்தை அவாவி நிற்போர் ஒன்று சேர்ந்து இயங்குவதற்கான தேவையை உணர்ந்து அதற்காக செயலிலும் இறங்கியுள்ள முன்னோடிகளின் சார்பில் லெனின் மதிவாணன் இந் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

தம்மிடம் முன் முடிவுகள் எதுவுமில்லை. கலந்துரையாடல்கள் மூலமே எமது குறிக்கோள்களை வரையறுத்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கும் இதன் அமைப்பாளர்களில் ஒருவரான ந.ரவீந்திரன் இதற்கான கலந்துரையாடல் ஒன்றை விரைவில் யாழ்ப்பாணத்திலும் நடாத்த விரும்புவதாக தெரிவிக்கின்றார்.

அமைப்பாளர்கள் சார்பில் லெனின் மதிவாணன் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட அங்குரார்ப்பண கூட்ட அழைப்பில் புதிய பண்பாட்டுக்கான வெகுஜன அமைப்பின் நோக்கங்கள் பற்றிய அறிமுக குறிப்பு பின் வருமாறுள்ளது:-

*வேறு வேறு அரசியல் தளங்களில் சமூக மாற்றத்துக்காக இயங்கிய பலர்*



*ஒன்றிணைந்து புதிய உத்வேகத்துடன் பயணிப்பதற்கான ஒரு தளமாக இதனைக் கட்டி எழுப்புவோம். மக்கள் முன்னென்றும் இல்லாத வகையில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாவதோடு அடிப்படை வாழ்வாதாரங்களை இழந்து வருகிறார்கள். அதேவேளை உலகமயமாதல் சூழலில் பன்னாட்டுக் கொம்பனிகளின் வேட்டைக்காடாக எமது மண் மாற ஏற்றதாக பண்பாட்டுச் சிதைவுகள் முனைப்பாக்கப்பட்டு வருகிறது. சொந்தப் பண்பாட்டை இழக்கும்போது பிறர்க்குப் பூரண அடிமையாதல் முற்றானதாகும் என்பதாலேயே பண்பாட்டுத் தளத்திலான இந்தத் தாக்குதல் என்பதறிவோம். இத்தகைய இருள் சூழ்ந்த நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும்?*

*அரை அடிமைத்தனங்களோடு நீடித்து வந்த பண்பாட்டை அப்படியே பாதுகாப்பதில் பொருளில்லை. மக்கள் விடுதலை பெறும் பண்புகளோடு தொடர்புடைய புதிய பண்பாடு கட்டியெழுப்பப்படுவதற்காக உழைக்க வேண்டியவர்களாய் உள்ளோம். அதன் பொருட்டு விடுதலை நாடும் அனைவரும் ஒன்றிணைந்து இயங்க ஏற்றதாக 'புதிய பண்பாட்டுத் தளம்' ஒன்றினை உருவாக்க நண்பர்கள் சிலர் கூட்டு முடிவை எட்டினோம்.வெகுஜன அமைப்பாக அமையும் இதன் கட்டமைப்பு, குறிக்கோள்கள், மார்க்கம் என்பவற்றைத் தொடர்ந்து கூட்டு விவாதங்கள் வாயிலாக எட்டுவோம்.*

*இந்த அமைப்பு, சமூக மாற்றத்துககாக உழைக்கும் எந்தவொரு கட்சிக்கும் சார்பானதோ எதிரானதோ இல்லை. அந்தவகையில் எந்தக் கட்சியிலும் உள்ள ஒருவர் தனது கட்சிக்குரிய அமைப்பாக்கும் நோக்கம் இல்லாமல், தனது கட்சிக்கு விரோதமாயல்லாத வெகுஜன செயற்களங்களில் எம்மோடு சேர்ந்து இயங்க இயலும். இது பரந்துபட்ட பண்பாட்டுத் தளம் என்கிற வகையில், வெவ்வேறு கலை-இலக்கிய அமைப்புகளில் உள்ளவர்களும் எம்மோடு சேர்ந்து இயங்குவதற்குத் தடை இல்லை.*

# ஐ.நா உறுப்பு நாடுகளின் 110 பரிந்துரைகளை ஏற்றது இலங்கை

ஜெனீவாவில் நடந்த, ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தில் 99 உலக நாடுகள் அளித்த 210 பரிந்துரைகளில் 100 பரிந்துரைகளை நிராகரித்த இலங்கை அரசு 110 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடு எடுப்பதாகவும் தெரிவித்துள்ளது.

அக்டோபர் மாதம் 22 ம் திகதி சுவிஸ் நாட்டின் ஜெனிவா நகரில் தொடங்கிய ஐ.நா. மனித உரிமைகள் 14 வது மீளாய்வு கூட்டம் நவம்பர் 5ம் திகதி நிறைவு பெற்றது.

ஆண்டுக்கு மூன்று கூட்டங்கள் நடைபெறுவது வழமை. ஒவ்வொரு கூட்டத்திலும் 14 நாடுகளில், மனித உரிமைகள் நிலை பற்றி அந்தந்த நாடுகள் அறிக்கை அளிக்கும். அந்த அறிக்கை தொடர்பாக பிற உறுப்பு நாடுகள் கேள்விகள் கேட்கும். அந்த கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட நாடு பதில் அளிக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் இந்த ஆண்டு இலங்கை அரசு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அறிக்கை மீதான உறுப்பு நாடுகளின் கேள்விகளுக்கு அமைச்சர் மகிந்த சரசிங்க விளக்கம் அளித்தார்.

இந்தியா தரப்பில் இலங்கை வடக்கு மாகாணத்தில் விரைந்து தேர்தல் நடத்த வேண்டும் எனவும் தமிழர் பிரசசனைக்கு விரைவான அரசியல் தீர்வு காண்பதே நல்லிணக்கத்திற்கு வழி வகுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் போரின்போது அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டது பற்றி உரிய விசாரணை தேவை என்றும், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைக்கு கால வரையறை தேவையென்றும் கூறப்பட்டுள்ளது. தமிழர் பகுதிகளில் தனியார் நிலத்தை ராணுவம் திரும்ப ஒப்படைக்கவும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் எண்ணிக்கையை குறைக்கவும் இந்தியா கோரியுள்ளது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்க பிரதிநிதி, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தடுக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில், இலங்கை போரின் போது காணாமல் போனதாக கூறப்பட்டவர்களை கண்டுபிடிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கை பிரச்னைக்கு தீர்வு காண தமிழர்கள் அதிகம் வசிக்கும் வடக்கு கிழக்கு பகுதிகளில் தேர்தலை நடத்துமாறு கனடா கோரியிருக்கிறது. .

இங்கு விளக்கமளித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் மகிந்த சமரசிங்க, தமிழர்களுக்கான திட்டங்களை செயல்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்ததுடன் போருக்குப் பின்னரான மறுசீரமைப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பெண்களின் பாதுகாப்புக்கு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.அத்துடன் காணாமல் போனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கூறியுள்ளார்.

நன்றி : தேனி இணையத்தளம்

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் வரவேற்கிறோம். அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் :-**

**P - Fach No: 506**
**Bern - 17,**
**Switzerland.**

**E.P.I.C., Box No: 95**
**95144 Garges Les,**
**Gonnesse Cedex,**
**France.**

**P - Box No: 7183**
**Arumpakkam,**
**Chennai - 106,**
**India.**

294, கண்டி வீதி
புங்கங்குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
021 2222022

**E P I C**
**PO BOX 431**
**SUTTON SM1 9LE**
**UK**
email: eprlfp@yahoo.co.uk

159, கடல்முக வீதி
திருகோணமலை.

படிப்பகம்

www.padippakam.com



# உழைக்கும் மக்களின் விடிவிற்காகவும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்தவர்



தோழர் வீ.ர கந்தசாமி மானிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்தவர். சுருட்டுச் சுற்றும் தொழிலாளியாக தொழிற்சங்க இயக்கம் ஊடாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து அரசியல் சமூகப் பணிகளில் ஈடுபட்டவர்.

## கம்யூனிஸ்ட் இயக்க பாதையில் உறுதியான பயணம்

மாக்ஸிஸ சிந்தனையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட தோழர் வீ.ர கந்தசாமி லெனின், மாவோ, ஹோசிமின் போன்ற தலைவர்களை அவர்களது கருத்துக்களை உயர்த்திப் பிடித்த ஒருவர். ஒரு தொழிலாளியான அவர் வடபகுதியில் இடதுசாரி இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக திகழ்ந்தவர். சிறந்த பேச்சாளர். தனது வாழ்நாள் முழுவதும் உழைக்கும் மக்களின் விடிவிற்காகவும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்தவர். சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச செயலாளராக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுக்குத் தலைமை கொடுத்தவர்.

கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்சி அதிகாரத்திலிருந்த சீனா, அல்பேனியா, ரஷ்யா போன்ற நாடுகளுக்குச் சென்று மக்கள் சீன தலைவர் மா ஓ சேதுங் அல்பேனிய தலைவர் அன்வர் கோஜா உட்பட உலக கம்யூனிட் இயக்க தலைவர்களுடன் அரசியல் கருத்துக்களை பரிமாறிக்கொண்டவர், விவாதங்களில் பங்குபற்றியவர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டு வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு தலைமைத்துவங்களின் கீழ் செயற்பட நேர்ந்தபோதும் கட்சியின் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்த போதும் மாக்ஸிஸ சிந்தாந்தத்தின் மீது அவர் கொண்டிரு ந்த உறுதி குலைந்துவிடவில்லை. உழைக்கும் மக்கள், சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கும், அரசியல் நடவடிக்கைகளுக்குமே அவர் எப்போதும் முன்னுரிமையளித்தார். தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் கண்ணியம் மிக்க ஒரு வீரராகவும், அப்பழுக்கற்ற தலைவராகவும் அவர் விளங்கினார்.

யாழ் மாவட்டத்தில் அண்ணாமலை, விஜயானந்தன் போன்ற இடதுசாரி தலைவர்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட பின் இடதுசாரிக் கட்சிகளின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. அத்துடன் இடதுசாரி சிந்தனை கொண்ட பலர் வர்க்க புரட்சி தான் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு எனக் கூறி சிறுபான்மை மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்களின் ஆயுதப் போராட்டத்தை நிராகரித்து ஒதுங்கிக் கொண்டனர்.

புலிகளின் தவறான போக்குகளை எதிர்த்துக் குரல்கொடுக்க முன்வராத, கண்டும் காணாமலும் விட்ட, புலிகள் தான் தொடர்ந்து போராடுகிறார்கள் என்று சொன்ன இடதுசாரிகள் கூட புலிகளால், போராட்டம் முட்டுச் சந்தில் கொண்டுவந்து விடப்பட்ட பின்னர் "இப்பிடி நடக்கும் என்று எங்களுக்கு எப்பவோ தெரியும்" என்றும், "நாங்கள் அப்பவே சொன்னோம்" என்றும் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்திக் கொள்வதை காண்கின்றோம்.

## ஈபிஆர்எல்எவ் இல் இணைந்து தொடர்ச்சியான பங்களிப்பு

தோழர் வீ.ர கந்தசாமி இவற்றுக்கு மாறாக ஆயுதந்தாங்கிய போராட்டத்துடன் இணைந்து பங்களித்தவாறே தவறான போக்குகளுக்கு எதிராக தனது விமர்சனங்களை முன்வைத்தார். தனது ஆற்றல், அனுபவம் மற்றும் தனது கருத்துக்களின் வலிமையோடு வேலைத்திட்டங்களை முன்மொழிந்தார் அவற்றை செயற்படுத்த அயராது உழைத்தார். ஈபிஆர்எல்எவ் அதற்கான களத்தை அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

1986 இன் பிற்பகுதியிலேயே ஈபிஆர்எல்எவ் அவரை அணுகி அரசியல் வேலைத்திட்டங்களில் பங்களிக்குமாறு கோரியது. அவரும் எம்முடன் இணைந்து பணியாற்ற முன்வந்தார். இதற்கு ஈபிஆர்எல்எவ் மாக்சிசம், லெனினிசத்தை வழிகாட்டும் தத்துவமாக ஏற்றுக்கொண்டிருந்ததும், தொழிலாளர்கள், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் நலன் சார்ந்து ஈபிஆர்எல்எவ் முன்னெடுத்து வந்த வேலைத்திட்டங்களும், எற்கனவே அவரோடு அரசியல் பணிகளில் ஈடுபட்ட பலர் ஈபிஆர்எல்எவ் இல் முன்னணிச் செயற்பாட்டாளர்களாகவும், ஆதரவாளர்களாகவும் இருந்ததும் காரணங்களாகும். குறிப்பாக சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி தோழர் வீ.ஏ.கந்தசாமியின் வழிகாட்டலுடன் முன்னெடுத்த பல வெகுஜன போராட்டங்களை முன்னின்று நடாத்திய மட்டுவில், மானாவளை கிராமமே ஈபிஆர்எல்எவ் இன் ஆதரவுத் தளமாகவும் இருந்ததை இங்கு குறிப்பிடலாம்.

தோழர் வீ.ஏ.கந்தசாமியை சந்தித்து இயக்க அங்கத்தவர்களுக்கு அரசியல் கல்வியை பயிற்றுவிப்பதற்கான கட்சிப் பள்ளி ஒன்றை அமைக்கும் எமது யோசனையை தெரிவித்து அவரது பங்களிப்பை கோரினோம். அவரது முன்னாள் தோழர்களும் இடதுசாரி இயக்கத்தின் முன்னோடிகளுமான மாதகல் கந்தசாமி, நீர்வை பொன்னையன் போன்றவர்களையும் சந்தித்து இதுபற்றி கலந்துரையாடினோம்.

## புலிகளின் தாக்குதலால் நிலைகுலையாத பண்பு

எமது முயற்சிக்கு பூரண ஒத்துழை ப்பு வழங்க முன்வந்த தோழர் வீ.ஏ.கந்தசாமி தனது போக்குவரத்திற்காக சைக்கிள் ஒன்றை மட்டுமே எம்மிடமிருந்து எதிர்பார்த்தார். அந்த சைக்கிளை எடுத்துச் செல்வதற்காக உரும்பிராயில் அமைந்திருந்த எமது அலுவலகத்திற்கு வந்திருந்த அன்று ஈபிஆர்எல்எவ் மீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர். இவ் அலுவலகத்திலிருந்து கைது செய்யப்பட்டு பின்னாளில் புலிகளால் கொல்லப்பட்ட தோழர் பெஞ்சமின், அலுவலக பொறுப்பாளர் தோழர் இளங்கோ ஆகியோருடன், சிறு காயங்களோடு தோழர் வீ.ஏ. கந்தசாமியும் புலிகளால் கைதுசெய்யப்பட்டார்.

மறுநாள் காலை கைதுசெய்யப்பட்ட அனைவரும் புலிகளின் தளபதி கிட்டுவின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்பட்டபோது தோழர் வீர கந்தசாமியை அடையாளம் கண்டுகொண்ட கிட்டுவின் உத்தரவின் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார்.

ஈபிஆர்எல்எவ் மீது தாக்குதல் தொடுத்து நாலு, ஐந்து மாதங்களில் புலிகளின் கெடுபிடிகள் ஓரளவு குறைந்து, புலிகளால் கைதுசெய்யப்பட்ட தோழர்கள் பலர் விடுவிக்கப்பட்டிருந்தனர். விடுவிக்கப்பட்ட பலரது வீடுகளுக்கும் சென்று ஆறுதல் கூறிய தோழர் வீ.ஏ கந்தசாமி, "அவங்களுக்கு பயந்து வீட்டுக்கை எத்தினை நாளைக்கு இருக்கப்போறியள் ஸ்தாபன வேலையளை தொடங்க வேணும்" என ஊக்குவித்தார். புலிகளால் விடுவிக்கப்பட்ட பலரையும் சந்தித்து ஒரு தொடர்பாளரைப் போலவும் செயற்பட்டார்.

உண்மையில் கட்சியில் முக்கிய பொறுப்புக்களை வகித்த பலர் புலிகளின் தாக்குதலால் நிலைகுலைந்தும், விரக்தியடைந்தும், தலைமையை, மக்களை, போராட்டத்தை குறைகூறிக் கொண்டும் தாம் ஒதுங்கிப் போவதற்கான நியாயங்களை தேடிக்கொண்டு அரசியலில் இருந்தே விலகிச் சென்ற போது தோழர் வீ.ஏ கந்தசாமி தன்னோடு தொடர்புபட்டிருந்த தோழர்களை சந்தித்து மீண்டும் அரசியல் நடவடிக்கைகளை தொடர்வதற்கு நம்பிக்கை ஊட்டினார்.

## மீண்டும் வந்த சந்தாப்பத்தில் சோர்வின்றித் தொடர்ந்த பணிகள்

விரைவிலேயே நாம் அனைவரும் மீண்டும் ஒன்றாக செயற்படும் சந்தர்ப்பத்தை இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தியது. செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபாவின் வேண்டுகோளின் படி தோழர் வீர கந்தசாமி ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தை அமைக்கும் வேலைத்திட்டத்தை முன்வைத்து செயற்படுத்தினார். ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவலாக இருந்து தொழிலாளர் சமூகத்தை ஸ்தாபனப்படுத்தும் வேலையை யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் மேற்கொண்டார். இந்த தொழிற்சங்க வேலைகளுடன் அவரது பங்களிப்பும், வழிகாட்டலும் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கும் அவசியம் என்பதை உணர்ந்த தோழர் பத்மநாபா அவரை ஒரு மாகாணசபை உறுப்பினராக நியமிப்பதற்கும் ஆவன செய்தார். ஆனால், மாகாணசபை உறுப்பினராக நியமனம் பெற்ற ஒரு சில மாதங்களிலேயே குறுகிய ஆயுளை கொண்டிருந்த மாகாணசபை செயலிழந்து போனது.

புலிகளுக்கும் அன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் இடையில் எட்டப்பட்ட உடன்பாடுகளின் நிமித்தம் பிரேமதாசா அரசு இந்திய அமைதி காப்பு படையை வெளியேறக் கோரியது. இந்திய அமைதிப்படையின் வெளியேற்றம் உறுதியானதை தொடர்ந்து கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் மாகாணசபை நடவடிக்கைகளில் பங்கேற்ற பலர் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்தனர். அவர்களோடு இந்தியாவிற்கு வந்திருந்த தோழர் வீர கந்தசாமி விரைவில் கொழும்பு திரும்பி எமக்கிருந்த வாய்ப்புகளை பயன்படுத்தி மக்கள் மத்தியில் செயற்படுவதற்கான சூழல் உள்ளதா என்பது குறித்து ஆராய்ந்தார், செயற்பட்டார். அத்துடன் "கட்சியை பலப்படுத்துவதற்கும், குறைகளை நிவர்த்திப்பதற்கும் 2வது கட்சி காங்கிரஸை நடாத்த வேண்டும்" என வலியுறுத்தினார். கட்சி காங்கிரஸ் அவரது மூச்சும், பேச்சுமாக இருந்தது. துயரம், 1993ம் வருடம் கட்சியின் 2வது காங்கிரஸ் நடைபெற்ற போது அவர் தன் மூச்சை நிறுத்தி மூன்று மாதங்கள் கடந்திருந்தது. காங்கிரஸ் நடைபெற்ற அரங்கு அவர் பெயரை சுமந்திருந்தது.

ஒரு பிரம்மச்சாரியாக அரசியலை தனது வாழ்க்கைத் துணையாகக் கொண்டிருந்த தோழர் வீ.ஏ.கந்தசாமி ஒரு இளைஞனுக்குரிய சுறுசுறுப்போடும், உற்சாகத்தோடும் அரசியல் பணிகளில் ஈடுபட்டு தனது 68 வது வயதில் 09.11.1992 அன்று சென்னை அண்ணாநகரில் தனது அரசியல் பங்காளியான தோழர் க.சுப்பையா அவர்களின் இல்லத்தில் இயற்கை மரணம் அடைந்தார். ஈபிஆர்எல்எவ் தோழர்கள், ஆதரவாளர்கள் தங்கவைக்கப்பட்டிருந்த புழல் இலங்கை அகதிகள் முகாமில் அவரது இறுதி மரியாதை நிகழ்வுகள் இடம்பெற்றன. அவர் எம்மை விட்டுப் பிரிந்து 20 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் அவர் கொண்டிருந்த சீரிய கருத்துக்களால், அர்ப்பணிப்பு மிக்க மக்கள் நலன்சார்ந்த செயற்பாடுகளால் முன்னுதாரண புருஷராக இன்றும் நம் மத்தியில் வாழ்கின்றார்.

---

## திவிநெகும: யாருடைய வாழ்வின் ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

ஒரே நிறுவனத்தின் ஊடாக் மேற்கொள்வதன் மூலம் வீண் விரயங்களை தடுப்பதும் திவிநெகும திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாக குறிப்பிடப்படுகின்றது.

திவிநெகும் அபிவிருத்தி திணைக்களத்தில் உள்வாங்கப்படும் சமூர்த்தி அதிகாரசபை ஊழியர்கள் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்பட்டு ஓய்வூதிய உரிமையை பெறுவதுடன் அரச ஊழியர்களுக்கு கிடைக்கும் புகையிரத பயணத்திற்கான ஆணைச் சீட்டு, நஷ்ட ஈடுகள், கடன்கள் போன்ற நன்மைகளையும் பெற்றுக் கொள்ள முடிவதுடன் பதவி உயர்வுகளையும் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது திவிநெகும திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பாதவர்கள் ஊழியர் சேமலாப நிதியினை பெற்றுக் கொண்டு விலகிக்கொள்ள முடியும்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திவிநெகும திட்டத்தை நடை முறைக்கு கொண்டு வருவதற்கு மாகாண சபைகளின் அங்கீகாரத்தை பெறவேண்டியிருப்பதே திட்டத்தை முன்வைத்த அரசாங்கத்திற்குள்ள பெரும் தடைக் கல்லாகும்.

மேலே, குறிப்பிடப்பட்ட அதிகாரசபைகள் திவிநெகும அபிவிருத்தி திணைக்களமாக மாற்றப்படும் போது கிராம மட்டத்தில் சேவை புரிவதற்கு மாகாணசபைகளுக்கு இருந்த அதிகாரம் மத்திக்கு அரசுக்கு சென்றுவிடும் என்பதால் மாகாணசபைகள் இதற்கு அங்கீகாரம் வழங்கக் கூடாதென தமிழ் தேசிய கூட்டமைப்பு கோரியது.

இருப்பினும் கிழக்கு மாகாணசபை உட்பட 8 மாகாணசபைகளிலும் திவிநெகும சட்ட மூலத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட மத்திய அரசு வடக்கு மாகாணத்தில் மாகாணசபை இல்லை என்பதை காரணம்காட்டி வடமாகாண ஆளுநரிடமிருந்து அனுமதி பெற்று இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முனைந்தது. திவிநெகுமவிற்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் ஊர்வலம் ஒன்றும் நடாத்தப்பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, வடக்கு மாகாண சபைக்கு பதிலாக திவிநெகும சட்ட மூலத்துக்கு ஆளுநர் வழங்கும் அனுமதியை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றையும் தாக்கல் செய்தது.

சட்ட மூலம் தொடர்பில் சரியான வியாக்கியானத்தை வழங்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கே உள்ளதால் திவி நெகும சட்டமூலம் தொடர்பில் அரசாங்கம் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையை கோரியிருந்தது. ஆனால், நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னதாகவே திவிநெகும சட்ட மூலத்தை நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் சேர்ப்பதற்கு அரச தரப்பு எடுத்த முயற்சி ஐக்கிய தேசியக் கட்சியின் கடும் எதிர்ப்பு காரணமாகவே கைவிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை நவம்பர் 6ம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஸ நாடாளுமன்றத்தில் அறிவித்தார். திவிநெகும திணைக்கள சட்டமூலத்தின் 8(2) சரத்து அரசியலமைப்புக்கு முரணானதெனவும் (2) சரத்து அரசியலமைப்பின் 3வது பிரிவுக்கு மாற்றமானதெனவும் சுட்டிக்காட்டி இவற்றை சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமே நிறைவேற்ற வேண்டும் எனவும் சட்டமூலத்தின் இன்னும் சில சரத்துக்கள் பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றே நிறைவேற்ற வேண்டும் எனவும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா தலைமையிலான உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழு தீர்ப்பு வழங்கியிருந்தது.

திவிநெகும திட்டம் மூலம் சமூர்த்தி ஊழியர்கள், பயனாளிகளுக்கு நன்மைகள் கிட்டும் என்பது புலனாகின்ற போதும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்போவது யார்? இதன் பயனாளிகளை தேர்ந்தெடுக்கப்போவது யார்? என்பது மாகாண சபைகளின் அதிகாரப் பகிர்வுக்காக போராடும் தமிழர் தரப்புக்கு எழும் நியாயமான கேள்விகளாகும்.

தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக கூறும் அரசாங்கம் தனது இந்த நடவடிக்கை அதற்கு எதிரானதில்லை என்பதை தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்புடையதாகும்.

## 13 ஆவதின் முக்கிய ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்த சட்ட அதிகாரங்களை நடைமுறைச் சாத்தியமாக்குவது மாத்திரமல்ல அதற்கு அப்பாலும் சென்று அதிகாரங்களை பகிர்வதே முறையாகும்.

பிராந்திய மட்ட அதிகாரப் பரவலாக்கலுக்கான தொடர் செயன்முறையை முன்னெடுப்பதும் அதனைப் பாதுகாப்பதுமான நடவடிக்கைகளில் அனைத்து ஜனநாயகசக்திகளும் இணைய வேண்டும்.

இதனை அலட்சியம் செய்தால் தனிமனித, உள்ளூராட்சி மட்ட சுதந்திரங்களும் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகலாம். அந்த நிலைமையும் இன்று ஏதோ ஒரு அளவில் காணப்படுகிறது.

ஊதாரணமாக உடுவில் பிரதேசசபையின் புதிய கட்டித்தின் மீது கழிவு எண்ணை ஊற்றப்பட்ட சம்பவம் ,நல்லூர் பிரதேசசபைத் தலைவர் தாக்கப்பட்ட சம்பவம் உட்பட ஏராளமானவற்றை நாம் உதாரணமாக சொல்ல முடியும் .இன மேலாதிக்க உணர்வுகளுக்கு மக்கள் எடுபடுவது சுதந்திரத்தை சர்வாதிகாரத்தின் கைகளில் தாரைவார்க்கவே உதவும்!

அபிவிருத்திக்கோ -நாட்டின் சுபிட்சத்திற்கோ- மக்களின் சகோதரத்துவத்திற்கோ உதவாது.

www.padippakam.com



# உள்ளுக்குள் முரண்பாடுகள் எழுவதை தவிர்ப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும்

கொக்கட்டிச்சோலை கலாச்சார மண்பத்தில் நடைபெற்ற வரவேற்பு கூட்டத்தில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இராசையா துரைரெட்ணம் உரை



**கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இராசையா துரைரெட்ணம்**

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் முரண்பாடுகள் எழுவதைத் தவிர்ப்தற்கு நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பபை பதிவு செய்ய வேண்டும் என கொக்கட்டிச்சோலை, கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற வெற்றிபெற்ற கிழக்கு மாகாண சபை உறுப பினர்களை வரவேற்கும் நிகழ்வில் உரையாற்றிய கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் அனைத்துக்கட்சிகளையும் நிராகரிக்க தயாராக இருக்கின்றார்கள். இதில் எதுவித கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. கட்சி அரசியல் செய்ய முயன்றால் மாற்றீடான கட்சி அரசியல் வரும் என்பதற்காகவும் உள்ளுக்குள் முரண்பாடுகள் எழுவதை தவிர்ப்பதற்கும் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர். நான இந்த தேர்தலில் வெல்லவில்லை. தமிழ்த் தேசியம் இந்த தேர்தலில் வென்றுள்ளது. இலங்கை அரசின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக, சர்வதேசத்தின் குரலுக்காக நாங்கள் இணைந்து வென்றுள்ளோம். கூட்டு உழைப்பு மத்தியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றுள்ளது. இது ஒரு கூட்டு முயற்சி. யாருடைய தனிப்பட்ட முயற்சியுமல்ல. யாரும் தனி நபராக விலை பேசவும் முடியாது. வாக்களித்த மக்கள் முகம் தெரியாமல் வாக்களித்துள்ளனர். நாமம் தெரியாமல் வாக்களித்துள்ளனர். அதற்குக் காரணம் தமிழ்த் தேசியம் பலப்படுத்தப்பட வேண்டும். போற்றப்பட வேண்டும் என்பதுதான். அந்த வாக்குகளுக்கு யாரும் உரிமை கோர முடியாது. மக்கள் எந்த நோக்கத்துக்காக வாக்குகளை அளித்தார்களோ அந்த நோக்கம் நிச்சயம் பாதுகாக்கப்படும். அதற்கான கௌரவத்தை நாங்கள் உங்களுக்கு வழங்குவோம். இங்கு தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் எங்கள் இலட்சியம் நிறைவேறும் வரையில் உறுதியுடன் செயற்படுவோம் என்று இங்கு கூறிக் கொள்கின்றேன்.

தேர்தல் ஒரு மனிதனின் ஜனநாயக உரிமையை நிலை நாட்டுவதற்காக நடத்தப்படுகின்றது. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஜனநாயக தேர்தல்களுக்கு மதிப்பளிப்பதில்லை. காரணம் நாங்கள் வாக்களிப்பதில்லை. பலருக்கு வாக்களிக்கத் தெரியாது. கடந்த கால ஆயுதப் போராட்டங்கள் காரணமாக தேர்தல்களை நாங்கள் சலுகைக்காக மட்டுமே பயன்படுத்தி வந்தோம். அதனை தமிழ் மக்களும் சலுகைக்காக பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகவே பார்த்தனர். அது இன்று மாற்றமடைந்துள்ளது. தேர்தல் ஊடாகத் தான் மக்கள் பிரதி நிதிகளை தெரிவு செய்ய வேண்டும். அவர்கள் ஊடாகத்தான் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் தேர்தல் ஊடாகத்தான் நாங்கள் சாதிக்க முடியும் என்ற சூழ்நிலைக்கு நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். ஆகவே நாங்கள் தேர்தல்களில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

எமது சமூகத்தில் சிலர் வாக்குப் போட்டு விட்டோம். இனி அவர்கள் வரமாட்டார்கள் என்று நினைப்பது உண்டு. அவை நேர்மையுள்ள நாகரீகமுள்ள அரசியல்வாதிகளுக்குப் பொருந்தாது. போக்கணங்கெட்ட அரசியல் செய்யும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கப்பம் பெறும் அரசியல்வாதிகளுக்கும் தான் அது பொருந்தும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அது பொருந்தாது. கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களாகிய நாம் இங்கு பல்வேறு பாரிய சுமைகளை கொண்டுள்ளோம். கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற நிலைமைகள் வேறு வடமாகாணத்தில் உள்ள நிலைமைகள் வேறு. வடக்கு மாகாணம் தமிழ்மக்களுக்கு உரிய மாகாணம். கிழக்கு மாகாணம் என்பது மூவின மக்களும் வாழும் மாகாணம். இந்த மாகாணத்தில் அரசியல் அதிகாரம் என்பது எமது கையில் இல்லை. இந்த அரசியல் அதிகாரம் இல்லாத வேளையில் இந்த அரசியல் அதிகாரத்தை நிலை நாட்ட நாங்கள் எவற்றை செய்ய வேண்டும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்தே ஆக வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வியில் கல்குடா மற்றும் படுவான்கரை கல்வி வலயங்கள் பின் தங்கியுள்ளன. இதனை வளர்ப்பதற்காக நாங்கள் செய்ய வேண்டிய நடவடிக்கையென்ன? நாங்கள் நீர்வளம் இல்லாத பகுதியில் இருந்து நீர்வளம் உள்ள பகுதிக்கு நீரைக் கொண்டு செல்கின்றோம். இது தான் இன்றைய திட்டமிடல், முகாமைத்துவம், அது எவ்வளவு பலவீனமாக இருக்கின்றது என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும். பல விடயங்களில் நாங்கள் பின் தங்கிய நிலைகளிலேயே இருக்கின்றோம்.

கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் எமது கையில் இல்லை. கல்வி எமது கையில் இல்லை. வியாபாரம் எமது கையில் இல்லை. விவசாயமும் கால் நடையும் மட்டுமே எம்மிடம் உள்ளன. அவையும் இன்று சீரழிந்து செல்லக் கூடிய நிலை உருவாகியுள்ளது. நாங்கள் இருப்பது மிகவும் ஆபத்தான நிலையில். இதனை ஈடு செய்வதற்கு எங்களால் என்ன செய்ய முடியும்?

நாங்கள் இருப்பது கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சியில். எனது அனுபவத்தில் கூறுகின்றேன் இம்முறை கிழக்கு மாகாண சபையில் ஆளும் தரப்பினர் பலமுள்ளவர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றக் கூடிய பலமுடன் இருக்கின்றனர். அதனை தோற்கடிக்கக்கூடியபலம் எம்மிடம் இல்லை. எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு நாங்கள் செய்ய வேண்டியவற்றை பேசியேயாக வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில், விகிதாசார அடிப்படையில் வேலை வாய்ப்பு, நிதியொதுக்கீடு எமக்கு கிடைக்காத பட்சத்தில் பிரதேச ரீதியான அபிவிருத்தியில் நாங்கள் புறக்கணிக்கப்படுவோம். அதற்காக நாங்கள் உழைக்க வேண்டும். எதிரக கட்சியில் இருந்து கொண்டும் செயலாற்றக்கூடிய பல வழிகள் எமக்கு இருக்கின்றன. இவ்வாறு அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

**கூட்டு உழைப்பு மத்தியிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது. இது ஒரு கூட்டு முயற்சி யாருடைய தனிப்பட்ட முயற்சியுமல்ல. தனிநபராக யாரும் விலை பேசவும் முடியாது. வாக்களித்த மக்கள் முகம் தெரியாமல் வாக்களித்துள்ளனர். நாமம் தெரியாமல் வாக்களித்துள்ளனர். அதற்கு காரணம் தமிழ் தேசியம் பலப்படுத்தப்பட வேண்டும் என்பது தான். மக்கள் எந்த நோக்கத்துக்காக வாக்களித்தார்களோ அந்த நோக்கம் நிச்சயம் பாதுகாக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் இலட்சியம் நிறைவேறும் வரையில் உறுதியுடன் செயற்படுவோம் என்பதை இங்கு கூறி வைக்கிறேன்.**

## தமிழர்கள் கண்டுகொள்ளாத ஆதரவு...

1 ம் பக்கத் தொடர்ச்சி

வெளியிட்டிருந்ததோடு இலங்கை பிரதிநிதிகளும் அதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கூட்டத் தொடரில் தெரிவித்திருந்ததாக ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ 13 வது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை முன்வைக்கப் போவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் உறுதியளித்ததாகவும் அப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

**கடும்போக்காளர்களின் எதிர்ப்பு**

ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஸ 13 வது திருத்தச் சட்டத்தினை முற்றாக இரத்துச் செய்ய வேண்டும் என இப்போது கருத்துத் தெரிவித்துள்ளார். மாகாணசபை முறையை இல்லாமல் செய்வதற்கான நேரம் வந்துவிட்டதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது அவரது தனிப்பட்ட கருத்து அரசாங்கத்தின் கருத்தல்ல என சமாதானம் சொல்லி புறக்கணிக்கப்பட்ட போதும் அரசாங்கத்தில் அவருக்கிருக்கும் செல்வாக்கு, அதிகாரம் புறக்கணிக்கப்படக் கூடிய ஒன்றல்ல.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளான ஜாதிக ஹெல உருமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளும் 13 ஆவது திருத்தத்தை இல்லாமலாக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன.

13 வது திருத்தம் மற்றும் மாகாணசபை முறை என்பவற்றின் எதிர்மறையான விளைவுகள் குறித்து தென்னிலங்கை மக்களுக்கு கல்வியூட்டும் வேலைத்திட்டங்களை தேசிய சுதந்திரமுன்னணி மேற்கொண்டிருப்பதாக கூறப்படுகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணசபைகள் செயலூக்கம் மிக்கவையாய் இல்லாதிருப்பதால் மாகாணசபை முறைமை ஒரு பிரச்சினைக்குரியதாக இல்லை. ஆனால், எல்.ரி.ரி.ஈ சார்பானவர்கள் இந்த சபைகளை கைப்பற்றியவுடன் பிரபாகரன் துப்பாக்கிகள் மூலம் அடைய முயற்சித்தவற்றை அவர்கள் சட்டரீதியான அங்கீகாரத்துடன் அடைய முயற்சிப்பார்கள். இந்த நிலை நீடித்தால் தெற்கில் உள்ள மக்களை ரி.என்.ஏ ஆட்சி புரிய தொடங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. என்பது 13 வது திருத்தத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிடும் அமைச்சர் விமல் வீரவன்சவின் வாதமாகும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸ மக்கள் சேவைக்காக கொண்டுவரப்படும் 'திவி நெகும' சட்டமூலத்தை நடைமுறைப் படுத்துவதற்கு 13 வது திருத்தச் சட்டம் தடையாக அமைந்தால், அந்த தடையை நீக்குவதற்கான தேவை எழுந்தால் 13 வது திருத்தச் சட்டம் தொடர்பில் பொதுமக்கள் கருத்துக் கணிப்பு நடாத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

**இடதுசாரி கட்சிகளின் ஆதரவு**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளின் தலைவர்களான டியூ குணசேகரா, திஸ்ஸ விதாரன, வாசுதேவ நாணயக்கார ஆகியோர 13 ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை, அதிகாரப்பகிர்வு என்பவற்றுக்கு தமது உறுதியான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

டியூ குணசேகரா

பாராளுமன்றத்தில் 13 வது திருத்தம் கொண்டு வரப்பட்ட சமயத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதும் அதை ஆதரித்த ஒரு சிலரில் நானும் ஒருவன் என்று குறிப்பிடும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும், சிரேஷ்ட அமைச்சருமான டியூ குணசேகரா. இவ்வாறான செயறபாடுகளால் யுத்த வெற்றியாகக் கிடைத்த சமாதானத்தை பேண முடியாது. பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான மாற்று ஏற்பாடின்றி 13 ஆவது திருத்தத்தை நீக்குவது தவறு எனத் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ விதாரண

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற பிரச்சாரத்தை அரசாங்கத் தரப்பிலுள்ள சிலரே மேற் கொண்டிருப்பது கவலைக்குரியதாகும் என்கிறார் லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண. மாகாணசபை முறை அறிமுகம் செய்யப்பட்டதை தொடர்ந்து இனப்பிரச்சினை காரணமாக ஆயுதம் தாங்கிய இயக்கங்களில் புலிகள் தவிர்ந்த அனைவரும் ஆயுதங்களை கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் ஜனநாயக அரசியலில் பங்கேற்க முன்வந்தனர்.

அரசியலமைப்பின் 13 வது திருத்தம் இரத்துச் செய்யப்படுமானால் தமிழ் மக்களது நம்பிக்கைகளை மட்டுமல்ல ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ விரும்பும் இந்த நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரதும் நம்பிக்கைகளையும் சிதறடித்துவிடும்.

13 வது திருத்த சட்டத்தில குறைபாடுகள் இருப்பின் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில் அவற்றை திருத்தி காத்திரமானதொரு அதிகாரப் பகிர்வுக்கு வகை செய்யப்பட வேண்டும் எனவும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

வாசுதேவ நாணயக்கார

அதிகாரப் பகிர்வுக்கு எதிரான இரு கட்சிகளே 13 வது திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டுமென கோரிவருகின்றன அரசியலமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படும் யோசனைகளை நான் முற்றாக எதிர்க்கிறேன். என்று தெரிவித்துள்ள ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார ஆயுதந் தாங்கிய இளைஞர்கள் அதிகாரப் பகிர்வை ஏற்று ஜனநாயக வழிக்கு திரும்ப 13 வது திருத்தம் உதவிகரமாயிருந்தது. ஆதில் குறைபாடுகள் இருப்பின் அதனை இரத்துச் செய்வது தீர[illegible] என்று தெரிவித்துள்ளார்.

**மல்லுக்கட்டி பயனில்லை**

இடதுசாரிகளின் ஆதரவுத் தளம் குறுகியதாய் இருந்த போதும் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து வெளிவரும் அவர்களது குரல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாட்டின் நலனில் அக்கறையுள்ளவர்களாகவும், பேரினவாதிகளுக்கு மத்தியில், தமிழ் மக்களின் நியாயமான தீர்விற்காக செயற்படுபவர்களாகவும் இருந்தபோதும் அவர்களின் கரங்களை பலப்படுத்துவதற்கு தமிழர் தரப்பு ஒருபோதும் முன்வருவதில்லை.

அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்தபோதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஜனாதிபதியின் ஆலோசகர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரும் 13 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் அவர்களின் கருத்துக்கள் முக்கியத்துவம் மிக்கவை.

13 ஆவது திருத்தத்தில் என்ன இருக்கிறது, அது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாகாது. 13 ஆவது திருத்தத்தால் பயனில்லை. மகாணசபைக்கு அதிகாரம் எதுவுமில்லை என்று வடக்கு கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளே கூறிவிட்டார் என்றெல்லாம் பேசியும், எழுதியும் வந்த தமிழர் தரப்பு இப்போது 13 ஆவது திருத்தத்தையும் இல்லாமல் பண்ணப்போகிறார்களாம் என்று புலம்பத் தொடங்கியிருக்கிறது.

13 வது அரசியலமைப்பு திருத்தத்திற் கெதிராக பேசுபவர்கள் இதனை நிறுததப் போவதில்லை, அது அவர்களது நிகழ்ச்சி நிரலாகும். எனவே அவர்களின் நடவடிக்கைகள் தொடரும் அவர்களோடு மல்லுக்கட்டுவதற்குப் பதிலாக 13 வது திருத்தம் அதிகாரப் பரவலாக்கல், மாகாணசபை முறைமை என்பன தொடர்பான உண்மைகளை தெளிவுபடுத்தும் செயற்பாடுகள் அவசியம். சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கப்படும் அச்சத்தை போக்கி, ஆதரவு திரட்டுவதே தமிழ் அரசியல் தலைமைகளின் வேலைத்திட்டமாகுதல் வேண்டும். இதற்கு நாடளாவிய ரீதியில் அரசியல், சமூக சக்திகளுடன் ஐக்கியப்பட்டு செயற்படுவது அவசியமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# கிழக்கில் கரையொதுங்கிய கடல் உயிரினங்கள் சாத்தியங்களும் புனைவுகளும்

## மறுபிரசுரம்: காத்தான்குடியில் கடல் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதும் அல்லது கரையொதுங்கி இறப்பதும்.

ஏ.எம்.றியாஸ் அகமட், B.Sc. (Sp. in Zoology) (EUSL), M. Phil (EUSL), M.Sc. (Wits, RSA), விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

காத்தான்குடியில் ஆயிரக்கணக்கான கடல் உயிரினங்கள் இறந்து கரையொதுங்கியதும் அல்லது கரையொதுங்கி இறந்ததும் இரண்டு மூன்று நாட்களாக பல்வேறு தரப்பினரதும் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக இருந்தது. இவ்வாறு கடல் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதற்கு அல்லது கரையொதுங்கி இறப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நோய்த் தொற்று, காலநிலை மாற்றம், பிழையான அல்லது சட்டவிரோதமான மீன்பிடிமுறைகள் (டைனமைட், சயனைட் மீன்பிடி முறைகள்), இயந்திரப் படகுகள், கப்பல்களிலிருந்து தவறுதலாகவோ அல்லது நோக்கமாகவோ கொட்டிவிடப்படும் இரசானப்பொருட்கள், கடலின் அடித்தளத்தில் புதைக்கப்படும் இரசாயன அணுக் கழிவுகள், இரசாயனக் கழிவுகள், ஆயுதங்களை பாவித்தல் அல்லது பரீட்சித்துப் பார்த்தல் போன்றவைகளைக் கூறலாம் என நினைக்கின்றேன்.

காத்தான்குடி நிகழ்வைப் பொறுத்தவரை இதில் எந்தக் காரணம் மிகப் பொருத்தமானதாக இருக்கும் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. நோய் காரணமென்றால், அதற்குரிய அறிகுறிகள் உயிரினங்களில் இருந்திருக்க வேண்டும்.

காலநிலை மாற்றம் காரணமென்றால், காலநிலை மாற்றம்தான் காரணம் என்ற இரு சொறகளை சொல்லிவிட்டு இலகுவாக சென்றுவிட முடியாது. சமுத்திரங்களின் மேற்பரப்பு நீரோட்டம் (10 சதவீதமான நீர் இதற்கு உட்படுகின்றது), கீழிருந்து மேற்பக்கமான நீரோட்டம் (மீதி 90 சதவீதம் நீர் இதற்கு உட்படுகின்றது. சமுத்திரங்களின் வெப்பநிலையை மாற்றுவதில் செல்வாக்கு செலுத்துவதும், மீன்களுக்கு அதிக போசணைப் பொருட்கள், உணவுகள் போன்றவற்றைத் தாங்கிக் கொண்டு வந்து மீன்பிடியை அதிகரிக்கச் செய்வதும் இந்த நீரோட்டம்தான்), இந்த நீரோட்டங்களை உருவாக்கும் சூரிய வெப்பம், காற்று, புவியீர்ப்பு விசை, கொரியோலிஸ் விளைவு போன்றவைகளை வைத்துக் கொண்டு அதனால் சமுத்திரத்தின் வெப்பநிலை (ஒரு வேளை அதிகரிக்கலாம் அல்து குறையலாம்), உவர்த்தன்மை, அதனுடன் விலங்கு அலையுயிரின் அடர்த்தி, ஒட்சிசனின் அடர்த்தி, கடல் உயிரினங்கள் சமுத்திரத்தின் வாழும் பகுதிகள் (அடியில், நடுப்பகுதியில், மேற்பகுதியில்), மற்றும் அதன் உணவு முறைகள் போன்றவைகளை தொடர்புபடுத்தி விளக்கம் கொடுக்க வேண்டும்.



**விலங்குகளின் அசாதாரண நடத்தைக்கும், இயற்கை அனர்த்தங்களின் முன்னறிவிப்பிற்கும் எப்போதும் தொடர்பு இல்லை அல்லது எப்போதும் தொடர்பு இல்லாமலும் இல்லை.**

இதனைத் தவிர மற்றையவைகளுக்கும் சாத்தியம் இல்லையென்று எதனையும் நிராகரிக்கவும் முடியாது.காத்தான்குடி கரைகளில் கடல் உயிரினங்கள் கரையொதுங்குவது போன்ற நிகழ்வுகள் இங்கு மட்டும் நடைபெறும் நிகழ்வுகள் அல்ல. கடந்த காலங்களில் அவ்வப்போதும், அண்மைய வருடங்களாக அடிக்கடியும் உலகின் பலபாகங்களிலும் நடைபெறுகின்றன. கடந்த வருடம் ஜனவரி, மார்ச் மாதங்களில் அமெரிக்காவின் அர்கன்சாஸ் மாநிலம், ஜனவரியில் அமெரிக்காவின் மேரிலாண்ட் மாநிலம், இங்கிலாந்தின் தனஸ் பகுதி மற்றும் பிரேசில், நியுசிலாந்து, சுவீடன் போன்ற பகுதிகளில் கடல் உயிரினங்கள் ஆயிரக் கணக்கில் இறந்து கரையொதுங்கியும் அல்லது கரையொதுங்கி இறந்துமுள்ளன. நோய்கள் காரணமாக இருக்கலாம். வெப்பநிலை உயர்ந்து இருக்கலாம். வெப்பநிலை குறைந்து இருக்கலாம். குளிர் நீர் விளைவாயிருக்கலாம். அபாயகரமான கழிவுகள் கடல் அடித்தளங்களில் புதைக்கப்பட்டிருக்கலாம். தவறுதலாக கடலில் வெளிவிடப்பட்ட இரசாயனக் கழிவுகளாக இருக்கலாம் போன்ற உறுதிப்படுத்தப்படாத காரணங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் இது போன்ற நிகழ்வுகளுக்கு தெளிவான காரணங்கள் முன்வைக்கப்படவில்லை. உறுதியான முடிவுகளும் முன்வைக்கப்படவில்லை. நூற்றுக்கணக்கான ஊகங்களும், அனுமானங்களும், கொள்கைகளுமே முன்வைக்கப்படுகின்றன. இவைகள் எப்போதும் மர்மமாகவே இருக்கின்றன.

எனவே இந்த நேரத்தில் நாம் செய்யக்கூடியது, அவதானம், கருதுகோள், பரிசோதனை, கொள்கை போன்ற படிமுறைகளினூடாக மக்களுக்கு விடையைத் தெரிவிப்பதுதான். இதன் நிமித்தம் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், ஆய்வாளர்களுமான பேராசிரியை ஸ்ரான்லி தேவதாசன், ஏ.எம். றியாஸ் அகமட் என்பவர்களால் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப் படுகின்றன.

ஆய்வுகளின் மூலம் விடையைத் தெரிவிப்பதிலுள்ள பிரச்சினை என்னவென்றால் ஊடகப் போட்டி, ஊடகப் பிரபல்யம், நான் முந்தி நீ முந்தி போன்ற காரணங்களால் சிறுபிள்ளைத் தனமான முதிர்ச்சியற்ற அறிக்கைகளை விடுவதே. எனவே இதனைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. அதிலும் ஆய்வாளர்கள் தவிர்த்துக் கொள்வது நல்லது.

இறுதியாக ஒருவிடயம், விலங்குகளின் அசாதாரண நடத்தைக்கும், இயற்கை அனர்த்தங்களின் முன்னறிவிப்பிற்கும் எப்போதும் தொடர்பு இல்லை அல்லது எப்போதும் தொடர்பு இல்லாமலும் இல்லை. ஆனால் இது சம்பந்தப்பட்ட ஆய்வு முறைகள் இலங்கையில் இன்னும் வளரவில்லை. சீனா போன்ற நாடுகளில் வளர்ந்திருக்கின்றன. ஆனால் எல்லா அசாதாரண நடத்தைகளும் அனர்த்தத்திற்கான முன்னறிவிப்பு என்று கொள்ளமுடியாது. அசாதரண நடத்தைகளை விலங்குகள் காட்டினாலும் (உயிரியல்), மற்றைய துறைகளான் வானிலையியல், காலநிலையியல், பௌதிகவியல், இரசாயனவியல், புவியியல் போன்ற துறைகளுடன் சேர்ந்த ஆய்வுகளின் மூலமே அதனை உறதிப்படுத்த முடியும்.

என்னைப் பொறுத்தவரை, இந்த அசாதாரண நடத்தை, சமீபகாலங்களில் உலகில் நடக்கும் சாதாரண நடத்தையில் ஒன்று என்று கருதிக கொள்வது நன்று என நினைக்கின்றேன்.

---



இ.இராசலிங்கம் சாவகச்சேரி

*[illegible]*

முள்ளிவாய்க்காலில்' முடிந்த அநதப் போர், இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையே நடந்த கொடூரமான போர். இதில் வேடிக்கை என்னவென்றால், அந்தப் போருக்கு இலஙகை அரசு அளித்த காரணம், ''தமிழர்களை புலிகளின் பிடிகளுக்குள்ளிருந்து விடுவிப்பதற்கான மனிதாபிமானப் போர்'' புலிகள் அளித்த காரணம், ''சிங்கள அரசாங்கத்திடமிருந்து தமிழர்களின் வாழ்வை மீட்பதற்கான விடுதலைப் போர்'' ஆக, இருதரப்பினரது கூற்றின்படி இந்தப் போர் தமிழ்மக்களின் நலனுக்காக!. ஆனால் நடந்தது என்ன? இரு தரப்பினராலுமே தமிழர் நலன்கள் காவு கொள்ளப்பட்டன. இரு தரப்பினராலுமே யுத்த விதிகள் மீறப்பட்டன. இரு தரப்பினரது செயற்பாடுகளினாலுமே பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

யுத்த விதிகளுக்கு விரோதமாகச் செயற்பட்டோரின் மீது விசாரணைகளை நடாத்தி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது நியாயமான கோரிக்கைதான். ஆனால் இதனை வலியுறுத்துபவர்களில் பலரும், பல அமைப்புகளும் தமிழர்களின் நலன் அல்லது அறம் சார்ந்த காரணங்களுக்காக இதை முன்னெடுக்கவில்ல. இவை சார்ந்ததாக இருப்பின் யுத்தம் நடந்த கால கட்டங்கலில் இவர்கள் இலங்கை அரசாங்கத்தைச் சாடியதோடு, புலிகளின் செயற்பாடுகளையும் சாடியவர்களாக இருந்திருக்க வேண்டும். அப்படி அவர்கள் நடக்கவில்லை.

எனவே, இந்த நடவடிக்கைகள முன்னெடுப்பவர்களில் அனேகருக்கு தமது சொந்த பலாபலன்களும், உணர்ச்சிகளுந்தான் நிகழ்ச்சி நிரலாக இருக்கிறது என்பது என் கருத்து. வெளிநாட்டு அரசாங்கங்களும், அவற்றின் பின்னணியில் இயங்கும் அமைப்புகளினது நிகழ்ச்சி நிரல், போர்க்குற்ற விசாரணை என்ற அழுத்தத்தைக் கொடுத்து மகிந்த ராஜபக்சா அரசின் சீனா, இரான் சார்பு நிலையைத் தடுத்துத் தங்கள் சார்பு நிலையை எடுக்க வைப்பது. புலம்பெயர்ந்த நாடுகளில் சமூகப் பிரமுகர்களாக வலம் வரும் தமிழர்களின் நிகழ்ச்சி நிரல், தாங்கள் தலைக்குமேல் தூக்கிவைத்துக் கொண்டாடிய புலிகளை மகிந்த ராஜபக்சா அரசு தோற்கடித்து விட்டது என்ற ஆத்திரத்தால் பழிக்குப் பழி வாங்குவது. வெளிநாட்டு அரசாங்கம் சார்ந்த அமைப்புகளின் ஆதரவில் தான், அவற்றின் நிகழ்ச்சி நிரலுக்குச் சாதகமாத்தான் இவை நடைபெறுகின்றன. ஆனால், இது பற்றிப் பேசித் திரியும் தமிழர்கள் ஏதோ தாங்களால்தான் இநத முயற்சி தீவிரமாக முன்னேறுகிறது என்று காட்டிக் கொள்கிறார்கள்.

இநத முயற்சி வெற்றி பெற வேண்டுமாயின். அடிப்படையாக மகிந்த ராஜபக்சாவின் அரசிற்கு சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு குறைய வேண்டும். பலமான எதிர்க்கட்சித் தலைவர்கள் இருக்க வேண்டும். மகிந்த ராஜபக்சாவின் அரசாங்கத்திற்கு எதிராக கணிசமான இலங்கை மக்கள் கிளர்ந்தெழும் நிலைமைக்கான உருவாக்கம் இருக்க வேண்டும். இந்த நிலைகள் இப்போதைக்கு ஏற்படும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால், போர்க்குற்ற விசாரணைகள் நடைமுறையில் மேற்கொள்ளப் படுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. மாறாக, மற்றைய பலம் வாய்ந்த நாடுகளுக்கு அடிபணியாது, அவற்றின் ஆதரவுடன் எடுக்கப்படும் தமிழர்களின் சூழ்ச்சிகளுக்கு துணிச்சலுடன் முகம் கொடுக்கும் சிங்கள மக்களின் தன்மானத்தைக் காக்கும் தலைவராகத் தன்னைச் சித்தரித்துக் கொள்வதாலும், அத்தகைய பிரச்சாரங்களை அவரது ஆதரவாளர்கள் முடுக்கி விடுவதாலும், எதிர்க்கட்சிகளின் தொடர்ந்த உட்பூசல்களினாலும், சிங்கள மக்கள் மத்தியில் அவரது அரசியல் பலம் மேலும் இறுகும் நிலையே ஏற்படுகிறது.

மகிந்த ராஜபக்சா சீனா, இரான் சார்பு நிலைகளைத் தளர்த்தி, இந்தியா, மற்றும் மேற்குல நாடுகள் சார்பு நிலை எடுப்பாரானால், அவர்கள் இநதப் போர்க்குற்ற விசாரணை முயற்சியை நீர்த்துப் போகச் செய்வார்கள். அத்துடன் அநத நடவடிக்கைகளின் தீவிரத் தன்மையும் கிடப்பில் போடப்பட்டு விடும்.

அத்துடன், மகிந்த ராஜபக்சா தமிழர்களின் மீள்குடியேற்றம், தமிழர் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம், நில அபகரிப்பு, மாகாண அரசியல் அதிகாரப் பரவலாக்கம் ஆகியவற்றிற்கு நீதியானதும், நியாயமானதுமான தீர்வுகளை ஏற்படுத்துவராரானால், இந்த விசாரணையை மேற்கொள்வதற்கான அழுத்தம் அற்றுப் போய்விடும். ஆனால் அவற்றைச் செய்வதற்கு அவருக்கோ அல்லது அவரைச் சாரந்தோருக்கோ அதற்கான மனத் திண்மையோ, அரசியல் அறிவுடைமையோ இருப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. இது நாட்டின் தூரதிருஷ்டமும் கூட.

தி.சுந்தரலிங்கம் உடுவில்

*[illegible]*

இல்லை. நிச்சயமாக இந்தத் தலைமுறையில் இல்லை என்றே நினைக்கிறேன். ஆங்காங்கே சில குண்டு வெடிப்புகள், துப்பாக்கிப் பிரயோகங்கள் நடக்கலாம். அவை இலங்கை அரசாங்கத்தால் அரசியல் இலாபத்திற்காகவோ, இலங்கை இராணிவத்தினரால் தமிழ்ப் பிரதேசங்களில் தங்கள் இருப்பைப் பலப்படுத்தவும் நிலைகொள்ளச் செய்யவும் ஆயுதப் போராட்டம் மறுபடியும் ஆரம்பித்து விட்டது என்ற நிலைமையை உருவாக்குவதற்கு திட்டமிட்டு நடாத்தப்படலாம் அல்லது, விரக்தியின் விளிம்பிலிருக்கும் முன்னாள் போராளிகள் சிலரால் மேற்கொள்ளப்படலாம் அல்லது, புலி சார்பினராகவும் பினாமிகளாகவும் செயற்பட்ட புலம்பெயர்ந்த சில தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்களால், நடந்து முடிந்த ஆயுதப் போராட்டத்தினால் தம் பண வருவாய்களையும், சமூகப் பிரபலயத்தையும் பெருக்கி ருசி கண்ட காரணமாகவோ, வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தினாலோ, புலம்பெயர்ந்த தமிழர்களைக் குஷிப்படுத்துவதற்காகவோ, ஏற்படுத்தப்படலாம் அல்லது வெளிநாட்டு உளவு ஸ்தாபனங்களால் அவர்களின் நாட்டு நலன்களுக்காக நடாத்தப்படலாம். அவை, ஈழத்தமிழர்களின் அவலங்களில் சவாரி செய்யும் தமிழ்நாட்டின் சில அரசியல்வாதிகளுக்கு விருந்தாகலாம் தமிழ் ஊடகங்கள் தங்களின் வினியோகத்தை விஸ்தரிக்க வழியாகலாம் உணர்ச்சி மூடர்களுக்கு இனிப்பாகலாம் இண்ணும் வெளிநாடுகளுகளில் அகதி அந்தஸ்து தீர்மானிக்கப்படாமல் இருப்பவர்களுக்கும், அகதி அந்தஸ்து கோர எண்ணிப் புறப்பட சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் சாதகமாக அமையலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் அவை, இலங்கையில் வாழும் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளையும், அவலங்களையும், வாழும் உரிமை மறுப்புகளையும், சமுதாயச் சீரழிவுகளையும் மேன்மேலும் அதிகரிக்கவே வழிகோலும் என்பது திண்ணம். அதனையே இலங்கையின் சிங்கள பேரினவாதிகள் எதிர்பார்த்து இருப்பார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# சம்பந்தர் ஐயா சாதிப்பாரரா?

## அவர் காட்டும் கட்சிச் சின்னத்துக்கு அடுத்தடுத்து வாக்களிக்கும் தமிழர்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்

விபீஷணன்

பெரும்பான்மையான இலங்கைத் தமிழர்கள் தமது எதிர்கால சமூக அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் தலைமைத்துவத்தை இப்போது சம்பந்தர் ஐயாவிடம் தமது வாக்குகள் மூலம் அங்கீகரித்து ஒப்படைத்திருக்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தலிலும் சரி ஜனாதிபதித் தேர்தலிலும் சரி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலிலும், அண்மையில் நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலிலும் சரி கடந்த மூன்றாண்டுகளில் நடந்து முடிந்த நான்கு வகையான தேர்தல்களிலும் மிகப் பெரும்பான்மையான தொகையில் இலங்கைத் தமிழர்கள் சம்பந்தர் ஐயாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அவர் சொன்ன சொற்படியே வாக்களித்திருக்கிறார்கள்.

### சம்பந்தர் ஐயாவின் பலமும் பிரபாகரனின் புகழும்

இன்றைய தேசிய மற்றும் சர்வதேச அரசியற் சூழ்நிலையில் சம்பந்தன் அவர்கள் பெற்றிருக்கும் மதிப்பும் மரியாதையும் அங்கீகாரமும் இலங்கைத் தமிழர்களின் நவீன அரசியல் வரலாற்றில் வேறெந்த தேர்தல் அரசியற் தலைவருக்கும் கிடைத்ததில்லை. தனிப்பெருந் தலைவர் என்று பேரெடுத்த குற்றவியல் வழக்குகளில் மாமேதை ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களுக்கோ, ஈழத்துக் காந்தி என்றும் மூதறிஞர், தந்தை என்றும் அழைக்கப்பட்ட திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுக்கோ, தானைத் தலைவர், அரசியல் நாவலர் என்று பெயரெடுத்த அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கோ கூட கிடைத்திருக்கவில்லை.

பொன்னம்பலம் அவர்கள் லண்டனில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அறியப்பட்டிருந்தார், அதைத் தவிர அவரை இலங்கைக்கு அப்பால் யாரும் அறிந்திருக்கவில்லை தந்தை செல்வா அவர்களையும் இலங்கைக்கு அப்பால் குறிப்பிடத்தக்க அளவுக்கு தொகையானோர் அறிந்திருக்கவில்லை. தமிழகத்திலும் டெல்லி மட்டத்திலும் ஒரு சில அரசியற் தலைவர்கள் மத்தியில் அவர் அறிமுகமாகி இருந்தார். அமிர்தலிங்கம் அவர்களை இந்திய இலங்கை வட்டத்துக்கு அப்பால் யாரும் அறிந்திருக்கவில்லை. அது மட்டுமல்ல. பொன்னம்பலம் அவர்களையும், தந்தை செல்வா அவர்களையும் ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர ஏனைய சிங்கள அரசியல் வட்டாரங்கள் பெரும்பாலும் வெவ்வேறு கோணங்களில் தமது எதிரிகளாகவே கருதினார்கள். அமிர்தலிங்கம் அவர்களை, ஐக்கிய தேசியக் கட்சி, மூங்கிலில் கட்டி இரண்டாகக் கிழிக்கப்பட வேண்டியவர் என்ற அளவுக்கு எதிரியாகவே பார்த்தது. இந்த மூன்று பேரும் இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் பெரும் ஜாம்பவான்களாகத் திகழ்ந்தவர்கள். ஆனால் இந்த மூன்று பேரில் எவருக்கும் அவர்களின் இறுதி யாத்திரையின் போது பாராளுமன்றக் கட்டிடத்தில் வைத்து தேசிய மரியாதை செலுத்தப்படவில்லை.

ஆனால், சம்பந்தன் அவர்களின் நிலை அதுவல்ல. அவர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ முன் மற்றும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் பெருந்தொகையானோரால் நன்கு அறியப்பட்டவர். சம்பந்தரை விட பிரபாகரனே உலக அளவில் அதிகமாக அறியப்பட்டவர் என்று சிலர் வாதிடக்கூடும். பிரபாகரன் பெற்றிருந்த உலக அறிமுகம் அவருக்கு தமிழ் மக்களிடமிருந்து கிடைத்த சட்டபூர்வமான அங்கீகாரத்தின் காரணமாகவோ அல்லது பிரபாகரனின் அரசியலுக்காக மக்கள் மானசீகமாக அன்பினால் வழங்கப்பட்டதோ அல்ல.

மாறாக பிரபாகரனுக்குக் கிடைத்த உலகப்புகழ் என்பது அவரது கொலைகார வல்லமைக்குக் கிடைத்த ஒன்றே. அவர் ஒவ்வொரு தமிழனையும் கல்முனையில் இருந்தாலென்ன கட்டுவனில் இருந்தாலென்ன அல்லது கன்னியாகுமரியில் இருந்தாலென்ன கனடாவில்தான் குடியேறி இருந்தாலென்ன எந்த நிமிடத்திலும் வெடி விழும் என்ற அச்சத்தில் வைத்திருந்தவர். பிரபாகரன் எங்கும் எவரையும் எப்படியும் கொல்லுவதில் வல்லவர் என்பதால் அவர் பெருமை உலகம் முழுவதும பரவியிருந்தது. சிங்கள இனத்தவர்களைப் பழிக்குப்பழி வாங்க வேண்டும் என மனநோய் பீடித்திருக்கும் தமிழர்களுக்கு புலிகளின் நடவடிக்கைகள் திருப்தியைத் தந்ததால் அந்தத் தமிழர்கள் பிரபாகரனின் புகழைப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், சம்பந்தர் ஐயாவின் முக்கியத்துவம் இலங்கைத் தமிழ் மக்கள் தமது பொன்னான வாக்குகளால் அளித்துள்ள அங்கீகாரத்தினால் ஏற்பட்டிருக்கிறது. அவர் அமிர்தலிங்கம் அவர்களின் அடியொற்றி அரசியல் கற்றவரெனினும் அந்த அமிர்தலிங்கத்தை நம்ப வைத்துப் படுகொலை செய்த பிரபாகரனுக்கே தண்ணி காட்டியவர். அவர் ஒரு சில இனவாத அரசியல் வாதிகளைத் தவிர ஏனைய அனைத்து சிங்கள அரசியற் சக்திகள் மத்தியிலும் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கிறார். அவர் எதிர்க்கட்சித் தலைவர்கள் மத்தியில் மட்டுமல்ல ஆளும் கட்சித் தலைவர்களது அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய தலைவராக உள்ளார்.

திரு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் தமிழரசுக் கட்சியை இலங்கையின் இடதுசாரிகள் ஏகாதிபத்தியத்தின் தரகர் கட்சியாகவே பார்த்தார்கள். ஆனால் சம்பந்தர் தலைமையிலான தமிழரசுக் கட்சியை தமது நட்புக் கட்சியாகவே பார்க்கிறார்கள். சர்வதேச உறவு கொண்ட ஒரு தொண்டு நிறுவனம் கூட அமிர்தலிங்கம் அவர்களின் தலைமைக் காலத்தில் அவருக்கு ஆதரவாக இருக்கவில்லை. ஆனால் இன்றைக்கு கொழும்பையும் வடக்கு கிழக்கையும் மையமாகக்கொண்டு செயற்படும் பெரும்பான்மையான தொண்டு நிறுவனங்கள் சம்பந்தன் அவர்களுக்குத் தோள் கொடுத்து உதவிக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்தும் அவை உதவத் தயாராக இருக்கின்றன. செல்வநாயகம் அவர்களுக்கோ அமிர்தலிங்கம் அவர்களுக்கோ எந்தவொரு முற்போக்கு சிங்கள புத்திஜீவியும் ஆதரவாக இருக்கவில்லை. ஆனால் இன்றைக்கு சம்பந்தன் அவர்களுக்கு ஆதரவாக பல நூற்றுக்கணக்கான புத்திஜீவிகள் இருக்கிறார்கள். அவர்கள் இனங்களுக்கிடையேயான சமாதானத்துக்காகவும் அதிகாரப் பகிர்வுக்காகவும் வேண்டிய உதவிகளை தொடர்ந்து செய்யவும் தயாராக இருக்கிறார்கள்

இலங்கைக்கு விஜயம் செய்யும் ஐ.நா.வின் செயலாளர் நாயகம் மற்றும் பிரதிநிதிகள் மேலும் வெளிநாடுகளின் அரசியற் தலைவர்கள் மற்றும் அரசியல் நிர்வாகப் பிரமுகர்கள் சம்பந்தன் அவர்களையும் ஒரு தேசியத்தலைவர் என்னும் வகையாகவே சந்தித்து அபிப்பிராயம் கேட்டே செல்கின்றனர். இப்போது கொழும்பில் இருக்கும் எந்தவொரு தூதரகமும் சம்பந்தன் அவர்களுக்கு அழைப்பு அனுப்பாமல் தமது சுதந்திர தினத்தையோ அல்லது குடியரசு தினத்தையோ கொண்டாடுவதென்றில்லை. இந்தியாவின் மிகப் பிரதானமான தலைவர்களுக்கு இந்தியப் பிரதமர் மத்தியில் என்ன முக்கியத்துவம் உள்ளதோ அதே அளவு முக்கியத்துவம் சம்பந்தன் அவர்களுக்கும் உள்ளது. இலங்கையின் ஜனாதிபதி வெளிநாடுகளுக்குச் செல்லுகிற பொழுதோ அல்லது வெளிநாட்டுத் தலைவர்கள் இலங்கைக்கு வருகிற பொழுதோ ஜனாதிபதி,, சம்பந்தனுடன் சமாதானத் தீர்வுக்காக பேசினேன்; பேசிக்கொண்டிருக்கிறேன்; தொடர்ந்து பேசுவேன்; பேசத் தயாராக இருக்கிறேன்; என்று ஏதாவது ஒன்றைச் சொல்லித்தான் உலகத் தலைவர்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

1956ம் ஆண்டு காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்த போது அமிர்தலிங்கம் அவர்களின் மண்டை உடைய அரசாங்க ஆதரவு ஆட்கள் அடித்தார்கள். 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின் போது திரு.செல்வநாயகம் அவர்களும் பொலிஸாரின் தடியடிக்கு ஆளானார். நாகநாதன் அவர்களை பொலிசார் தமது தடி உடையும் வரை அடித்தார்கள். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பலர் பல தடவைகள் அரசினால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் எவராவது அரசினால் கொல்லப்பட்டிருந்தாலும் கூட அது அன்று ஒரு இலங்கைச் செய்தியாக மட்டுமே இருந்திருக்கும். ஆனால், இன்றைக்கு சம்பந்தர் மீது அரசு ஒரு தும்பை விட்டெறிந்தால் கூட அது உலகச் செய்தியாகும். அது ஐரோப்பியப் பாராளுமன்றத்திலும் அமெரிக்க காங்கிரசிலும் கண்டனத்துக்குரிய ஒரு விடயமாகப் பேசப்படும் - தீர்மானிக்கப்படும். சம்பந்தன் அவர்களின் தலைமையில் பத்தாயிரம் பேர் வேண்டாம், ஓராயிரம் பேர் கூடி வன்முறையற்ற ரீதியில் நடத்தும் ஒரு சத்தியாக்கிரகத்தின் போது பொலிஸார் சாதாரண தடியடிப் பிரயோகம் செய்தால் கூட அது இந்தியப் பாராளுமன்றத்தையே கொதிக்க வைக்கும், ஜெனிவாவில் நிச்சயமாக இலங்கை அரசுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் தீர்மானமாக மாறும். சர்வதேச யுத்த தர்மங்களை மீறியதாக உள்ள குற்றச்சாட்டைச் சமாளிப்பதை விட அப்படியொரு பொலிஸ் தடியடியை சமாளிப்பது இலங்கை அரசுக்கு மிகவும் கடினமானதாவே இருக்கும்.

### இலங்கை அரசின் போக்கும் இலக்கும்

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை சிறுபான்மையினராக்குவதற்கு இலங்கை அரசுக்கு சுமார் எழுபத்தைந்து ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போதுள்ள இலங்கை அரசு வடக்கில் தமிழர்களை சிறுபான்மையினராக்குவதற்கு அவ்வளவு நீண்ட காலத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதாகவே தெரிகிறது. புலிகளுக்கு எதிராக நடத்திய யுத்தத்தில் பெற்ற வெற்றிக் களிப்பின் சூட்டோடு சூடாக வடக்கின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் வெற்றியையும் சாதிக்க எல்லா முறைகளையும் பாவிக்கிறது.

1987 ம் ஆண்டு அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 13வது திருத்தத்தின் மூலம் இலங்கையில் மாகாணசபை ஆட்சிமுறை உருவாக்கப்பட்டது. அரசியல் யாப்பில் மாகாணசபைகளுக்கான அதிகாரப் பகிர்வுகளும் வரையறுக்கப்பட்டன. மத்திய அரசுக்கும் மாகாண அரசுகளுக்குமான அதிகார மற்றும் நிர்வாக உறவுகள் நிர்ணயிக்கப்பட்டன. அந்த மாகாணசபை அமைப்பு முறையை வலுப்படுத்துவதற்கு மாறாக மாறிமாறி வந்த அரசாங்கங்கள் அதனை வலுவிழக்கச் செய்து இறுதியில் அதனை இல்லாது ஆக்குவதிலேயே அக்கறையாக இருந்து வந்துள்ளன. அதிலும் ராஜபக்ஷாக்களின் அரசாங்கம் வெகுவிரைவிலேயே அரசியல் யாப்பிலிருந்து 13வது திருத்தத்தை இல்லாது ஆக்கிவிட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளதென்றே தெரிகிறது. கடந்த காலங்களில் 13வது திருத்தத்தை வலுவிழக்கச் செய்யும் வகையாக சட்டங்கள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் கொண்டு வரப்பட்டபோது முஸ்லிம் மற்றும் மலையக மக்களின் கட்சிகளும் அரசாங்கங்களுக்கு ஆதரவாகவே இருந்து வந்துள்ளன. எனவே, 13வது திருத்தத்தை வலுப்படுத்துவதிலோ அல்லது நியாயமானதொரு அதிகாரப் பகிர்வு ஒன்றைக் கொண்டு வரும் முயற்சியிலோ சிறுபான்மை இனமக்களின் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக, உறுதியாகச் செயற்படும் என எதிர்பார்க்க முடியாது. இந்த அரசாங்கத்துக்கு எதையும் செய்வதற்குத் தேவையான மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட பெரும்பான்மை பாராளுமன்றத்தில் இருக்கிறது. இந்த அரசாங்கத்துக்கு குறைந்த பட்சம் இன்னுமொரு பத்தாண்டுகளுக்காயினும் இந்த நிலைமை தொடரும் என்றே தெரிகின்றது.

### வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்பும் சம்பந்தர் ஐயாவின் உறுதியும்

இப்படியானதொரு நிலையில் திரு. சம்பந்தன் அவர்களிடமிருந்து பெரும் அரசியல் சாதனைகளை அவர் காட்டும் கட்சிச் சின்னத்துக்கு அடுத்தடுத்து வாக்களிக்கும் தமிழர்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் என்பதே உண்மை. ஒவ்வொரு தேர்தலின் போதும் அவர் சொல்கிறபடியே தமிழ் மக்கள் நடந்து கொள்கிறார்கள். அப்படியான தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறவற்றை சம்பந்தன் அவர்கள் சாதித்துக் கொடுப்பாரா என்பதே இன்றைக்கு அரசியல் விமர்சகர்கள் முன்னாலுள்ள கேள்வி.

இலங்கைத் தமிழர்கள் சம்பந்தன் அவர்கள் பிரதானமாகச் சாதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இவைதான் -

1. வடக்கு கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.
2. வடக்கு கிழக்கில் எஞ்சி இருக்கும் இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்க வேண்டும்.
3. வடக்கு கிழக்கு மாகாணசபைகளுக்கு சுய நிர்ணய உரிமைகள் கொண்ட அதிகாரங்களைப் பெறவேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து பிரிக்கப்பட்ட தமிழர்களின் தாயகத்தை ஒன்றாக ஆக்கவேண்டும்.

இந்தியாவும் மற்றும் பிரதானமான உலக நாடுகளும் யுத்த வெற்றியால் பெற்ற சமாதானத்தை மாகாணசபைகளுக்கான அதிகாரப்பகிர்வின் மூலம் அரசியல் ரீதியில் நிரந்தர சமாதானமாக ஆக்கவேண்டும் என்று கோருகின்றன. இந்தியாவும் சரி ஏனைய உலக நாடுகளும் இந்த அக்கறையை எவ்வளவு காலத்துக்கு தொடர்ந்து கொண்டிருப்பார்கள் என்பது கேள்விக்குறி. இந்த நாடுகள் தத்தமது நாடுகளின் தேசிய நலன்கள் தொடர்பான வியாபாரங்களுக்கு இலங்கை அரசு ஒத்துக் கொள்கிற போது அந்த நாடுகள் அதிகாரப் பகிர்வு, தமிழர்கள், சர்வதேச யுத்த சட்டங்களை மீறியமை, மனித உரிமைகள் என்ற மற்றவர்களின் விவகாரங்களை தமது குப்பைக் கூடைக்குள் போட்டு மூடி விடுவார்கள்.

சம்பந்தன் அவர்கள் எண்பது வயதை தாண்டிவிட்டார். அவருக்கு ஒன்றென்றால் பிரபாகரன் கட்டிக்கொடுத்து அவர் தலைமை ஏற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சில கட்சிகளின் தலைவர்கள் பிய்த்துக் கொண்டு போய் சம்பந்தர் தலைமையிலான தமிழரசுக் கட்சியை ஓரம் கட்டுவதற்கு இப்பொழுதே கங்கணம் கட்டி கொடியும் பிடிக்கத் தொடங்கி விட்டார்கள். இன்றுள்ள தேசிய மற்றும் சர்வதேச யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு அரசியற் தீர்வுகளுக்காக எந்தவொரு விட்டுக் கொடுப்பை சம்பந்தன் அவர்கள் மேற்கொண்டாலும் அடைந்தால் தமிழீழம் இல்லாவிடில் மீண்டும் மீண்டும் நந்திக்கடல் என்னும் சூழுரையுடன் வெளிநாடு பூராவும் பரந்திருக்கும் புலிப் பிரமுகர்களும் யாழ்ப்பாணத்து தமிழ்த்தேச சுயநிர்ணய உரிமைப் பிரமுகர்களும் சம்பந்தன் ஐயாவுக்கு துரோகிப் பட்டம் கட்டகிஞ்சிற்றும் தயங்க மாட்டார்கள்.

தனது வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளில் அந்த வகையான துரோகிப் பட்டம் கிடைக்கும் நிலை தனக்கு ஏனென மீனுக்கு தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் அரசியலை மேற்கொள்ளப் போகிறாரா? அல்லது தனக்கு என்ன பேர் வந்தாலும் பரவாயில்லை தான் வாழும் காலத்துக்குள், தன்னை நம்பியிருக்கும் சமூகத்துக்கு எது நல்லதோ அதையே செய்வேன் என்னும் உறுதியுடன் போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் என அவரது மனச்சாட்சிப்படி செயற்பட்டு தனக்கு மக்களால் அளிக்கப்பட்ட கடமையில் முன்னேற்றங்களை நிகழ்த்திக் காட்டுவாரா? ஒன்றையுமே சாதிக்காமல் அடுத்த பாராளுமன்றத் தேர்தலிலும் தமிழ் மக்கள் முன்னால் வந்து நின்று அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவற்கு ஆணை தாருங்கள் என்று கேட்கும் வரை காலத்தைக் கடத்துவாரா?

இருபது ஆண்டுகள் திரு. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பதை சாதிப்பார் என்று பொறுத்திருந்தோம். பிறகு ஒரு இருபது ஆண்டுகள் தந்தை செல்வா சமஷ்டியைச் சாதிப்பார் எனக் காத்திருந்தோம். திரு. அமிர்தலிங்கம் கேட்டபடி வாக்களித்தால் தமிழீழத்தைச் சாதித்துவிடுவார் என ஒரு பத்தாண்டுகள் நம்பியிருந்தோம். பின்னர் பாராளுமன்றத்தால் தமிழீழம் கிடைக்காது எனக் கண்டு அண்ணன் பிரபாகரனை தேசியத் தலைவராக்கி பணமாகவும் நகைகளாகவும் அவருக்கு அள்ளிக் கொடுத்து அவர் ஆயுதங்களால் தமிழீழத்தை சாதிப்பார் என இருபந்தைந்து ஆண்டுகள் இழக்கக் கூடாததையெல்லாம் இழந்து எதிர்பார்த்திருந்தோம். எழுபத்தைந்து ஆண்டுகள் இப்படிக் காத்துக் காத்து, இழந்தும்; அழிந்தும்; சிதறியும்; சின்னாபின்னப்பட்டும் போயுள்ள இலங்கைத் தமிழ்ச் சமூகம் சில சங்கடமான சூழல்களைக் கொண்டிருந்தாலும் எந்தத் தலைவருக்கும் கிடைக்காத வாய்ப்புகளையம் வல்லமைகளையும் கொண்ட சம்பந்தர் ஐயாவின் சாதனையைப் பார்ப்பதற்கு எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருக்கும்? பொறுத்திருப்போம்.

www.padippakam.com



அரசியல் அதிகாரம் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களின் கைகளில் குவிவது சமூக ஜனநாயக உணர்வுகளுக்கு எதிர்மாறானது. மனிதகுல இயல்புகளுக்கு விரோதமானது.

'திவிநெகும' சமுர்த்தி, மத்திய மாகாண அபிவிருத்தி, தென் பகுதி அபிவிருத்தி போன்றன அதுவும் பில்லியன் கணக்கான பணத்துடன், இருவேறு சட்டவாக்க நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள்.

**தனி மனிதனின் சுதந்திரம், வெவ்வேறு மட்டங்களில் அரசியல் அதிகாரம், அரச முறைமை என்பன சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமானவை**

மத்தியில் மாத்திரமல்ல பிராந்திய மட்ட அரசியல் சபையின் அனுமதியைப் பெற வேண்டும்.

ஒன்றையொன்று அனுசரித்தல், கலந்து பேசுதல் என்பன இலங்கையில் புழக்கத்தில் வரவேண்டும்.

ஜனநாயகம் என்பது கலந்துரையாடல் உடன்படுதல், வேறுபடுதல், நடைமுறைச் சாத்தியமாக்குதல் என்பவற்றையும் உள்ளடக்கியதே. ஆரோக்கியமான ஜனநாயக சமூகத்தில் இவை துரித கதியில் நிகழும்.ஆனால் நோயுற்ற சமூகத்தில் குறைப் பிரச வமாகவே நிகழும்.

மிக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடாகவும், உலகம் முழுதும் காலனிகளைக் கொண்டிருந்ததுமான பிரித்தானியாவின் ஸ்கொட்லாந்து சுதந்திரமாக இருப்பதா அல்லது அது தனியாகச் செல்வதா என்பது பற்றிய வாக்கெடுப்பு 2014 இல் நடத்துவதற்கு பிரித்தானிய அரசும் **ஸ்கொட்லாந்து அரசும்** உடன்பாடு கண்டுள்ளார்கள்.

ஸ்கொட்லாந்தின் பிரச்சனை பிரித்தானியாவில் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவிக்கவில்லை

யாரும் குய்யோ முறையோ என்று கத்தவில்லை. காட்டிக்கொடுப்பு துரோகம் பற்றி எவரும் பேசவில்லை. சமகால நவீன உலகின் இயக்கப்போக்கின் குறியீடு.

இலங்கை என்னதான் சொன்னாலும் முதலாளித்துவ உற்பத்தி உறவு முறையையும், நிலமானிய தளைகளையும் பெருமளவு கொண்ட நாடு.

இங்கு ஜனநாயகப் புரட்சி நிகழ வேண்டியிருக்கிறது. அது தான் இன சமூகங்களுக்கும் பிராந்தியங்களுக்கும் அதிகாரப்பரவலாக்கல்.

இலங்கை மாதிரி சிறிய நாட்டிற்கு இதெல்லாம் சரிப்பட்டு வராது என்கிறார்கள் பேரினவாதிகள். சிறியநாட்டில் மக்களுக்கு சுதந்திரம் தேவையில்லை. **சகல அதிகாரம் கொண்ட ராசாக்கள்** இருந்தால் போதும் என்பது இதன் மறைபொருளாகும்.

மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படாததாலேயே அவை வெள்ளையானை எனப்படு

13 வது இன்று உள்ளூர் விடயம் மாத்திரமல்ல. அது உலக விவகாரம். ஐ. நா வலியுறுத்துகிறது.

இலங்கையின் உண்மைகளை கண்டறியும் குழுவும் வலியுறுத்தியுள்ளது.

இது தனியொருவரின் விருப்பு வெறுப்பு சார்ந்த விடயமுமல்ல.

சமகால உலகின் நாடுகள், நாடுகளுக்குள்ளே மக்களின் சுதந்திரம் பற்றிய மிகப் பெறுமதி வாய்ந்த கோட்பாடுகள் இருக்கின்றன.

ஆக்கிரமிப்புக்கள், ஒடுக்குமுறைகள் நிகழ்ந்து கொண்டிருந்தாலும் இந்த அறவியல் கோட்பாடுகள் உலகளாவிய அளவில் நடைமுறையில் வலியுறுத்தப்படுகின்றன.

அது எகிப்தின் சதுக்கங்களாக இருக்கலாம், எதென்சின் வீதிகளாக இருக்கலாம். உலக சபைகளில் பெரும்பான்மை நாடுகளின் குரலாக இருக்கலாம், மனித உரிமை அமைப்புக்கள், இயற்கை, சுற்றாடல் பேரழிவுகளுக்கு எதிரான அமைப்புக்களாக இருக்கலாம். இவையெல்லாம் மனித குல வாழ்வியல் அறம் பற்றி வலியுறுத்தி நிற்கின்றன.

- அவசரகாலச் சட்டம் , பயங்கரவாத தடைச்சட்டம் அகற்றப்பட்ட
- சகல அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை காலாவாதியான
- இராணுவவச் சாயல்கள் அகன்ற

**தமிழ் சமூகத்தின் நலிவு மௌனமாகத் தொடர்கிறது.**

இதனை தடுத்து நிறுத்துவதற்கு அதிகாரப்பகிர்வு, அரச முறையில் பங்குதாரர்களாவதற்கான வழி வகைகள் கண்டறியப்பட வேண்டும். அதே வேளை தொடர்ந்து ஜனநாயக மயப்படுத்தலுககான போராட்டம் விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் நிகழ வேண்டும்.

**சமூக அழிவு, மக்கள் துரதேசங்களுக்கு புலம்பெயர்ந்து கொண்டிருத்தல், 3வது சிறுபான்மையினமாக தமிழர்கள் மாறி வரும் எதார்த்த நிலை எல்லாமே விளங்கிக் கொள்ளப் பட வேண்டும்.**

குட்டி முதலாளித்துவத் தலைமைகள் எப்போதும் அது சிறிய தேசியமோ, அல்லது பெருந்தேசியமோ ஆக்கபூர்வமான நிகழ்ச்சி நிரலுக்கு பதிலாக மக்களுக்கு போதையூட்டும் நிகழ்ச்சி நிரலையே விரும்பும். ஆனால், விடயம் ஒரு முட்டுச் சந்திற்கு வந்து விட்டது.

இனிமேல் இதனைத் தொடர்வதற்கான அகப் புறச் சூழல்கள் அருகி விட்டன.

சமூக அழிவு, மக்கள் ஊரை விட்டு துரதேசங்களுக்கு புலம்பெயர்ந்து கொண்டிருத்தல், 3வது சிறுபான்மையினமாக தமிழர்கள் மாறி வரும்

# ஜனநாயகத்திற்கான பாதையில் முன்னரோ பின்னரோ தடைகள் தகரும்

**அரசியல் யாப்பில் உள்ள 13 வது திருத்தச் சட்ட மூலத்தின் கீழான அதிகாரங்களையும் வழங்க முடியாதென்றால் தமிழ் முஸ்லிம் மலையக மக்களுக்கு அடுத்த தெரிவு என்ன என்ற கேள்வி எழுகின்றது.**

இலங்கையைப் பொறுத்தவரை நீதித் துறை சட்டவாக்க சபைகள் (மத்திய பிராந்திய) விசேட அதிகாரம் என்பன ஒன்றையொன்று பழுதாக்காமல் தனித்துவங்களை தாரைவார்க்காமல் இசைவுபட்டு நடத்தல் என்பதே அரசியல் யாப்பின் அடிப்படையாக உள்ளது.

தற்போது விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்து இலங்கையில் அழுத்தம் பெற்று வருகிறது.

1978 இற்குப் பின்னர் அது இலங்கையின் அரசியல் சமூக பொருளாதார தளத்தில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அதன் சிதைவியக்கத்தில் இராணுவ சர்வாதிகாரத்தை

**13 வது திருத்தம் தமிழ் மக்களின் போராட்டத்திலும் தியாகத்திலும் விழைந்தது. இதனை நிராகரித்தவர்கள் தெற்கில் மாகாணசபைகளில் அங்கத்துவம் வகிக்கிறார்கள்.**

நோக்கிச் செல்வதற்குமான நிலைமைகள் தோன்றியுள்ளன.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அவை கட்டற்ற நிலைக்குச் சென்றுள்ளன.

18 வது திருத்த சட்டமூலம் பிராந்தியங்களின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி விசேட அதிகாரம் கொண்ட சாம, பேத, தான, தண்டங்களினூடாக நிரந்தரமாகி விடுவதற்கான ஆபத்தான சாத்தியங்கள் அதிகமாக இருக்கின்றன.

17வது அரசியல் திருத்த யோசனைகள் சுதந்திரமான நீதிச்சேவை ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் சேவை ஆணைக்குழு, பொதுசேவை ஆணைக்குழு தொடர்பில் அரசமட்டதிலான இடைவெளி பரிசீலனை மனநிலை என்பன யுத்தத்திற்கு பிந்திய அரசியல் சூழலில் அள்ளுண்டு போயின.

### அதிகாரப்பகிர்வுக்கான ஆதரவு குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல

தனி மனிதனின் சுதந்திரம் வெவ்வேறு மட்டங்களில் அரசியல் அதிகாரம், அரச முறைமை என்பன சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானவை.

கின்றன. அதிகாரப்பரவலாக்கலை விரும்பாதவர்களும் இவ்வாறு கூறுகிறார்கள்.

இது ஏகபோக மன நிலையின் வெளிப்பாடாகும்.

மக்கள் சுதந்திரமாக சமூக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் ஊடாக தான் நாடு அபிவிருத்தியடையமுடியும்.

மக்கள் மாப்புக் கட்டு கட்டிநின்று தங்கள் பரோபகாரத்தில் நெகிழ்ந்து நெக்குருகி நிற்க வேண்டும் என்று அதிகார வர்க்கம் எதிர்பார்க்கிறது.

பாதுகாப்பு செயலாளர் தனது நிர்வாக பதவி நிலைக்கப்பால் சென்று 13 வது திருத்தச் சட்டமூலம் நீக்கப்படவேண்டும் என்று கூறியிருப்பதற்கு அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் இடதுசாரி அமைப்புக்களின் தலைவர்களான வாசு ,திஸ்ஸவிதாரண போன்ற தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கையின் பாரதூர தன்மையை இவர்களின கருத்துக்கள் பிரதிபலிக்கின்றன.

அரசியல் யாப்பில் 13வது திருத்தச் சட்ட மூலத்தின் கீழான அதிகாரங்களையும் வழங்க முடியா தென்றால் தமிழ், முஸ்லீம், மலையக மக்களு க்கு அடுத்த தெரிவு என்ன என்ற கேள்வி எழுகிறது.

13 வது வெறும் இலக்கம் அல்ல. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பெறுபேறு.

தமிழ் மக்களின் போராட்டதிலும் தியாகத்திலும் விழைந்தது அது.

இதனை நிராகரித்தவர்கள் கூட தெற்கில் மாகாண சபைகளில் அங்கத்துவம் வகிக்கிறார்கள்.

இனங்களுக்கும், பிராந்தியங்களுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான முயற்சியின் ஒரு படிக்கல்.

அதிகாரங்களை சகல மட்டத்திற்கும் முன் எடுத்துச் செல்வதற்கான பிராந்திய மட்டங்களில் அரசமுறையில் பங்குபற்றுவதற்கான படிக்கல்.

அந்த படிக்கல்லையே உடைத்து விடுவதென்றால் அடுத்ததென்ன? மக்கள் கீழ்படிவுள்ளவர்களாக நடந்து கொள்வதா?

அல்லது ஒற்றையாட்சிக்கு அப்பால் சிறுபான்மைச் சமூகங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதா? படிப்பகம்

- பல்லினங்களின் மக்களின் முகங்கள் முன் நிறுத்தப்பட்ட

அரசியல் சமூக முறைமை இலங்கையில் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

இன்று மாற்றங்கள் தேவைப்படுகிறது. பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. அரசியலமைப்பிலிருந்து சமுதாய நிலைமைகள் வரை மாற்றங்கள் ஜனநாயக மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற எவற்றையும் கருத்திற்கெடுக்காத அரசியல்-அறஞ்சார்ந்த அரசு உருவாக்கத்தை கடைசி வரையும் ஏற்படுத்தாது.

மாற்றத்திற்கான விழிப்புணர்வு மக்களிடமும் வேண்டும். தலைவர்களிடமும் வேண்டும்.

### தெரிவுக்குழுவில் பங்கு பற்ற வேண்டிய தேவை

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு எவ்வளவு தூரம் அவநம்பிக்கைக் குரியதாக இருப்பினும் அதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பங்கு பற்றியாக வேண்டும்.

இடதுசாரிக் கட்சிகள், முஸ்லீம், மலையக மக்களின் கட்சிகள் அதிகாரப்பரவலாக்கலை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதிகளும் இருக்கிறார்கள்.

இந்த இடைவெளியில் தமிழ் மக்கள் சார்பிலான கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

முரண்பாடுகள் ஏற்படும். இவை ஒன்றும் கடந்த காலத்தில் நிகழாதவையும் அல்ல. ஆனால், இணக்கமும் முரண்பாடும் என்ற விடயம் அவசியம்

ஒன்றும் நிகழவில்லை என்றால் அவர்கள் அம்பலப்படுவார்கள். சத்தி மிக்கவர்கள், சாமானியர்கள் உட்பட பலரும் கூர்ந்து அவதானிக்கும் விடயம்.

நாம் எமது சமூகத்தின் கௌரவமான சுயமரியாதையான வாழ்விற்கு எம்மை அர்ப்பணிக்க தயாராக இருக்கவேண்டும். மலையக - முஸ்லீம் மக்களின் உரிமைகள் பிராந்திய மட்டத்தில் அதிகாரங்கள் பகிர்வதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும்.

பரந்தளவிலான ஆதரவு தளம் உருவாக்கப்பட வேண்டும்.

எதார்த்த நிலை எல்லாமே விளங்கிக் கொள்ளப் பட வேண்டும்.

சிறுபான்மை சமூகங்களும் தென்னிலங்கையின் முற்போக்கான சமூகப் பிரிவும் இணைந்து செயற்பட வேண்டும்.

பேரினவாத, குறுந்தேசியவாத மோதல்கள் இன்றைய சர்வதேச உலகமயமாகக்ல் சூழலில் செல்லுபடியற்றுப் போகலாம்.

நிலமானிய சமூகத் தழைகள் அறுந்து வருவது தவிர்க்கமுடியாதது.

பேரினவாத வியாபாரமும் தொடர்ந்து ஓட முடியாது

**உலக சக்திகளின் நலன்களுடனும் இணைந்தில்லாமல் உலகில் எதுவுமே நிகழ்வதில்லை. இதில் தீர்க்க தரிசனத்துடன் இலங்கையின் ஜனநாயக சக்திகள் செயற்பட வேண்டும்.**

வெற்றி தோல்வி பற்றிய கதைகள், இராணுவ மேன்மை புகழாரங்களை அதிக காலத்திற்கு செய்ய முடியாது. கடை போண்டியாகிவிடும்.

நிஜப் பசியும், தேடலும் எல்லா மக்களுக்கும் இருக்கின்றன.

இனப்பிரச்சனை இலங்கையில் தீர்க்கப்பட வேண்டும், ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும் மனித உரிமைகள், தொடர்பான சமுதாயப் பேரழிவு தொடர்பான கணக்கு வழக்குகள் சர்வதேச நிகழ்ச்சி நிரலின் பாகமாகி விட்டன.

எல்லாமே பல்வேறு உலக சத்திகளின் நலன்களுடனும் இணைந்தது. உலகில் எதுவுமே அவ்வாறில்லாமல் நிகழ்வதில்லை.

இதில் தீர்க்க தரிசனத்துடன் இலங்கையின் ஜனநாயக சக்திகள் செயற்பட வேண்டும்.

உணர்ச்சி வசப்படுத்தாத, சகல மக்களினதும் கௌரவமான வாழ்க்கைக்கான சாத்தியங்கள் இருக்கின்றன. சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இதுவும் நழுவிப்போய்விடக் கூடாது.

சுகு - ஸ்ரீதரன்

www.padippakam.com



### உணர்வெழுச்சியினாலோ ஆயுதக் கவர்ச்சியினாலோ

# போராடப் புறப்பட்டவரல்ல



தோழர் வினோத் சாவகச்சேரி நுணாவிலை பிறப்பிடமாக கொண்டவர். 1983 இனக்கலவரததிற்கு முன்பாகவே அரசியல், சமூகப் பணிகளில் ஈடுபட்டு ஈழமாணவர் பொது மன்றம், ஈழ வாலிப முன்னணி ஆகிய முன்னணி அமைப்புக்களுடாக ஈபிஆர்எல்எவ் இன் அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுத்தவர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கபொத உயர்தரத்தில் கல்வி பயின்ற தோழர் வினோத், யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் மின் இலத்திரனியல் துறையில் கல்வி பயிலும் காலத்திலேயே தமிழ் மக்களின் விடிவிற்கான விடுதலைப் போராட்டத்தில் ஈபிஆர்எல்எவ் உடன் இணைந்து தன்னை முழுநேர பணியாளராக ஆக்கிக் கொண்டார்.

அப்போதிருந்து நேரம், காலம் பார்க்காது கட்சிப் பணிகளில் ஈடுபட்டதுடன், அரசியல் நூல்களை கற்றும், அரசியல் கருத்தரங்குகளில் பங்குபற்றியும், ஆக்கபூர்வமான விவாதங்களில் ஈடுபட்டும் தனது அரசியல் கருத்துக்களை, சிந்தனையை செழுமைப்படுத்திக் கொண்டார். பொருளாதாரம், பெண் விடுதலை, சினிமா, கலை இலக்கியம் போன்ற பல்வேறு விடயங்களிலும் சமூக பிரச்சினைகளிலும் முற்போக்கான பார்வை கொண்ட ஒருவராக அவர் தன்னை வளர்த்துக் கொண்டார்.

இராணுவக் கெடுபிடிகள் நிறைந்த அக்காலப்பகுதியில் அவரது வீடு ஒரு கட்சி அலுவலகம் போல பயன்படுத்தப்பட்டது. அரசியல் வகுப்புக்கள் அவரது வீட்டிலேயே நடாத்தப்பட்டன. இவற்றுக்கு அவரது குடும்பத்தினர் வழங்கிய ஒத்துழைப்பு காத்திரமானதாகும். ஆனாலும் தோழர் வினோத்தின் விடாப்பிடியான கொள்கைப் பற்றும், உறுதி தளராத நிலைப்பாடும் எல்லாவற்றையும் விட முதன்மையானவையாகும். கண்ணோட்டம் பத்திரிகையின் முதலாவது இதழ் அவரது வீட்டில் அவர் படிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையிலேயே றோனியோ முறையில் அச்சிடப்பட்டது.

தோழர் வினோத் உணர்வு எழுச்சியினாலோ, ஆயுதக் கவர்ச்சியினாலோ, தனிப்பட்ட, குடும்ப பிரச்சினைகள் காரணமாகவோ ஆயுதப் போராட்டத்தில் இணைந்து கொண்டவரல்ல. சமூகத்தில் நிலவிய பாரபட்சங்கள் அநீதிகளுக்கெதிரான கோபம் கொண்டிருந்தார்.அவற்றை ஒழிப்பதற்காக உழைக்கவும், போராடவும் தயாராயிருந்தார். சமூகத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளை போக்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் விரும்பினார். எல்லாவற்றுக்கும் மேலாக ஏற்றத்தாழ்வில்லாத சமூகம் ஒன்றை கனவாக கொண்டிருந்ததனாலேயே அவர் ஈபிஆர்எல்எவ் உடன் இணைந்து செயற்பட முன்வந்தார். ஈபிஆர்எல்எவ் உடனான இணைவு அரசியல், சமூக விடயங்களில் அவர் மேலும் தெளிவு பெறவும், நடைமுறை வேலைத் திட்டங்கள், கூட்டு முடிவுகள், கூட்டு செயற்பாடுகள் வாயிலாக தனது ஆற்றல்களை மேம்படுத்திக்கொள்ளவும் முடிந்ததினால் மக்கள் மத்தியிலும், தோழர்கள் மத்தியிலும் சிறந்த போராளியாய் திகழ்ந்தார்.

ஆரம்பகாலங்களில் அவர் வாழ்ந்த தென்மராட்சிப் பிரதேசத்தில் அரசியல் வகுப்புக்களை ஏற்பாடு செய்து இளைஞர்களை அணிதிரட்டுவதிலும், கட்சியின் பிரச்சார நடவடிக்கைகளிலும் தீவிரமாய் ஈடுபட்டார். பின்னர் இதே பணிகளை ஈழ வாலிப முன்னணியில் ஒருவராயிருந்து குடாநாடு முழுவதும் மேற்கொண்டார்.

அவ்வாறு கட்சி உட்சுற்று அறிக்கைகள் மற்றும் பிரசுரங்களை இதர பகுதிகளுக்கு விநியோகிப்பதற்காக மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற வேளையில் சங்கத்தானை என்னுமிடத்தில் பார ஊர்தி ஒன்றினால் மோதப்பட்டு உயிரிழந்தார். அவரது இழப்பு அரவது ஊரவர்களுக்கும், கட்சி தோழர்களுக்கும் அதிர்ச்சியாகவும், ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்துவதாயும் அமைந்ததுடன் அவரது குடும்பத்தினருக்கும், கட்சிக்கும் பேரிழப்பாகும்.



### துப்பாக்கி துரைத்தனத்துக்கு இரையாகிப்போன

# ஆற்றல் மிகு தோழன்

தோழர் றேகன் (நல்லதம்பி இன்பராசா) வவுனியா மாவட்ட இராணுவ பிரிவுக்கு தளபதியாக செயற்பட்டவர். சர்வதேச விடுதலை இயக்கம் ஒன்றின் பாசறையில் ஆயுதப் பயிற்சி பெற்றவர். வவுனியாவில் கட்சியை பலமாக கட்டியெழுப்ப கடுமையாக உழைத்தவர். புலிகளின் அப்போதைய துணைத் தலைவர் மாத்தயாவால் பொய் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 25.11.1985 அன்று படுகொலை செய்யப்பட்டார்.

புலிகளின் இந்தப் போக்கு எமது போராட்டத்தை திசைமாற்றிவிடும், சின்னாபின்னமாக்கிவிடும் இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதை ஈ.பிஆர்எல்எவ், தமிழ் மக்களிடம் அழுத்தி உரைக்கத் தவறவில்லை. இதனை வலியுறுத்தும் நோக்கில் தோழர் றேகன் படுகொலை செய்யப்பட்ட செய்தி ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்களை பயன்படுத்தி நகரங்கள், கிராமங்கள் எங்கும் மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. மக்களின் காதுகளுக்கு எட்டிய இச் செய்தி அவர்களின் சிந்தனையை தொடவில்லை. எமது சமூகத்தில் நிலவிய பிற்போக்கு தனங்கள் அதற்கு இடம்தரவில்லை. படுகொலைகள் தொடர்ந்தது.

சக இயக்கங்களை சேர்ந்தவர்களை சமூக விரோதிகள் என்றும் தேசத் துரோகிகள் என்றும் படுகொலை செய்த புலிகள் சக இயக்கங்களை நோக்கியும், மக்களை நோக்கியும் தமது துப்பாக்கிகளை திருப்ப அதிக காலம் எடுக்கவில்லை. இறுதியாக தமது இயக்க உறுப்பினர்களையே இந்த போக்கு பலியெடுக்க பின்நிற்கவில்லை. தோழர் றேகனை சமூகவிரோதி என முத்திரை குத்தி படுகொலை செய்ய காரணமாயிருந்த புலிகளின் பிரதி தலைவர் மாத்தையாவும் இந்த தவறான போக்கிற்கே பலியாக நேர்ந்தது.

முஸ்லிம் இனமே துரோகிள் பட்டம் சூட்டப்பட்டு துரத்தியடிக்கப்பட்டது. புலிகளின் தளபதியான கருணாவும் அவரை ஆதரித்த ஆயிரக்கணக்கான புலிகளும் துரோகிகளாக்கப்பட்டார்கள், பல நூற்றுக்கணக்கானோர் கொல்லவும் பட்டார்கள். முள்ளிவாய்க்கால் வரை புலிகளோடு சென்று உக்கிரமான யுத்தத்திற்குள் அகப்பட்டு தமது உயிரை பாதுகாப்பதற்காக அங்கிருந்து வெளியேறிய மக்களும் கூட துரோகிகளாக்கப்பட்டு, தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

இந்த வரலாற்றுப் பக்கங்கள் தமிழ் சமூகத்தின் கண்களை திறக்கும் நாளில் தெருக் குழிகளில் இரத்த வெள்ளத்தில் உறைந்து போன தோழர் றேகனின் கனவுகள் நனவாகும்.

# நம் இடர் தீர தம் உயிர் தந்தவர்களை நினைவு கூருவோம்

**தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து நவம்பர் மாதத்தில் உயிர் நீத்த தோழர்கள் இவர்கள்.அவர்களின் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத் தோழர்களுக்கு எமது அஞ்சலியை செலுத்துவோம்.**

| இல | தோழர் | முழுப் பெயர் | சொந்த இடம் | திகதி | காரணம் |
|---|---|---|---|---|---|
| 01 | நித்தி | கே.நித்தியானந்தன் | ஆரையம்பதி | 07.11.1985 | எஸ்.ரி.எவ் |
| 02 | ரமேஸ் | | மண்டூர் | 17.11.1986 | எஸ்.ரி.எவ் |
| 03 | சூரி | வி.கமலநாதன் | குருக்கள் மடம் | 04.11.1986 | எஸ்.ரி.எவ் |
| 04 | தயான் | மார்க்கண்டு முத்தையா | செங்கலடி | 28.11.1986 | எஸ்.ரி.எவ் |
| 05 | மதி | எஸ்.மதியழகன் | வாளைச்சேனை | 27.11.1986 | எஸ்.ரி.எவ் |
| 06 | கிருபா | எஸ்.கிருபைராஜன் | வந்தாறுமூலை | 28.11.1986 | எஸ்.ரி.எவ் |
| 07 | ஜெயா | கே.ஜெயசீலன் | மண்டூர் | 20.11.1987 | புலிகள் |
| 08 | சங்கர் | ரி.சங்கரன் | சேனைக்குடியிருப்பு | --.11.1987 | புலிகள் |
| 09 | கீர்த்தி | எஸ்.பாலச்சந்திரன் | மண்டூர் | 29.11.1987 | புலிகள் |
| 10 | காந்தன் | கந்தையா தவக்குமார் | மட்டக்களப்பு | 14.11.1986 | |
| 11 | ரகு அண்ணா | க.கோகுலதாஸ் | தம்பிலுவில் 2 | 16.11.1986 | |
| 12 | தம்பி | லோறன்ஸ் அமிர்தநாதன் | மட்டக்களப்பு | 13.11.1989 | |
| 13 | சிவனேஸ் | கதிர்காமத்தம்பி முருகேசன் | மகிழடித்தீவு | 12.11.1990 | |
| 14 | றேகன் | நல்லதம்பி இன்பராசா | வவுனியா | 23.11.1985 | புலிகள் |
| 15 | நியூட்டன் | யோசப் நியூட்டன் | கிளிநொச்சி | 02.11.1987 | புலிகள் |
| 16 | கந்தசாமி | வீ.ஏ.கந்தசாமி | மானிப்பாய் | 09.11.1992 | இயற்கை |
| 17 | வினோத் | சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் | சாவகச்சேரி | 14.11.1984 | விபத்து |
| 18 | அப்துல்லா | இரத்தினம் பேரின்பநாதன் | கோப்பாய் | 26.11.1988 | புலிகள் |
| 19 | காந்தன் | குலேந்திரன் | ஏழாலை | 10.11.1989 | புலிகள் |
| 20 | கணேஸ், சுரேஸ் | | மண்டான் | 20.11.1988 | புலிகள் |
| 21 | கரன் | | தொண்டமானாறு | 21.11.1988 | புலிகள் |
| 22 | பாலா | பாலசுப்பிரமணியம் | பலாலி | 28.11.1985 | விபத்து |
| 23 | அசோக் | இ.வடிவேல்சிங்கம் | குருநகர் | 26.11.1989 | புலிகள் |
| 24 | ஞானம் | | புன்னாலைக்கட்டுவன் | 21.11.1988 | புலிகள் |
| 25 | விஜி | | கொட்டடி | 20.11.1988 | புலிகள் |
| 26 | ரவி | | வாதரவத்தை | 29.11.1988 | புலிகள் |
| 27 | ரவி | | செல்வநாயகபுரம் | 29.11.1988 | புலிகள் |
| 28 | | பொன்னர் ஸ்ரீதரன் | மயிலங்காடு | 02.11.1991 | புலிகள் |
| 29 | | சின்னத்துரை சித்திரவேலு | சுண்ணாகம் | 14.11.1985 | இராணுவம் |
| 30 | | மிக்கேல் தேவதாஸ் | யாழ்ப்பாணம் | 11.11.1989 | புலிகள் |
| 31 | | வல்லிபுரம் குணசிங்கதாஸ் | மட்டுவில் | 28.11.1988 | புலிகள் |

தமிழ பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று வருடந்தோறும் இம் மாதத்தில் உயிர் நீத்தவர்களில் எகம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம் இங்கு நினைவு கூரப்பட்ட தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்துவதற்கு அவர்களது படங்கள் அவர்கள் தொடர்பான தகவல்களை எமக்கு அனுப்பி உதவுமாறு தோழர்கள் அன்பர்கள் நண்பர்கள் குடும்பத்தவர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இங்கு இடம்பெறத் தவறிய தோழர்கள் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் படங்களை வைத்திருப்பவர்கள் அவற்றையும் எமக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகின்றோம்.

### துணிச்சலும் துடிப்பும் மிக்க

# செயல் வீரன்



யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த தோழர் அப்துல்லா (இரட்ணம் பேரின்பநாதன்) 1983 க்கு பின்னரான காலப்பகுதியில் பெருமளவான இளைஞர்கள் இயங்கங்களில் இணைந்துகொண்ட போது ஈபிஆரஎல்எவ் மக்கள் விடுதலைப் படையில் இணைந்து ஆயுதப் பயிற்சி பெற்றார். இராணுவ நடவடிக்கைகளின் போது முன்னணியிலிருந்து செயற்பட்டார். யாழ் குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து இராணுவம் வெளியேற முற்பட்ட வேளைகளில் இராணுவத்தை தடுத்து நிறுத்த எதிர் தாக்குதல்களில் ஈடுபட்ட வெவ்வேறு இயக்கப் போராளிகளுடன் களத்தில் நின்றவர். துணிச்சலும் துடிப்பும் மிக்கவர்.

எமது கட்சியை அழித்தொழிக்க புலிகள் நடாத்திய தாக்குதலையும் அச்சமயம் பல நூற்றுக்கணக்கான தோழர்கள் புலிகளால் சிறைப்படுத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன், பலர் படுகொலை செய்யப்பட்டதையம் பொறுக்க முடியாதவராக புலிகள் மீது தீவிர வெறுப்பை கொண்டிருந்தார். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் மீண்டும் கட்சி நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொண்ட தோழர் அப்துல்லா புலிகளுடன் நேரடி மோதல்களை சந்தித்தவர். 26.11.1988 அன்று அத்தகைய ஒரு மோதலில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியானார்.

தோழர் அப்துல்லாவின் முத்த சகோதரரான தோழர் நகுலன் (இ.சர்வலோகநாதன்) 1984 காலப்பகுதியில் கட்சியுடன் இணைந்து செயற்படத் தொடங்கியவர். தோழர் நகுலன் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலிலிருந்த காலகட்டத்தில் நோர்வே அரசின் தலைமையின் கீழ் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு செயற்பட்டுக்கொண்டிருந்த சமயம் 2005 ஆம் ஆண்டு வவுனியா நகருக்கு சமீபமாக, உரிமைகோரப்படாமல் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



# காணி ஆவணங்கள் வழங்கும் நடவடிக்கை சாதனை புரியுமா வலி -கிழக்கு பிரதேச செயலகம்

வலி-கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் காணிக் கச்சேரி நடத்தி 288 குடும்பங்களுக்கு காணி ஆவணங்கள் வழங்கப்படவுள்ளதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் வலி கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்ற வேளை 6 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 288 குடும்பங்களுக்கு காணி கச்சேரி நடாத்தி காணி ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டு அதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி ஜே 275 நவக்கிரி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 30 குடும்பங்கள், ஜே 273 புத்தூர் மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 24 குடும்பங்கள், ஜே 267 ஊரெழு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 40 குடும்பங்கள், ஜே 272 சிறுப்பிட்டி மேற்கு கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த 11 குடும்பங்கள், ஜே 287 அச்சுவேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 148 குடும்பங்கள், ஜே 265 உரும்பிராய் தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 33 குடும்பங்கள் இந்தக் காணிக் கச்சேரி மூலம் பயன்பெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வலி- கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள இந் நடவடிக்கை மிகவும் அவசியமானதொன்றாகும் பத்திரிகைகளில் வெளியாகும் பல செய்திகள் போன்று இதுவும் வெறும் செய்தியாக மட்டும் இருந்து விடாமல் செயல்வடிவம் பெறுமாயின் பாராட்டுக் குரியதாகும்.

காலம் காலமாக புறம்போக்கு நிலங்களிலும், தனியார் காணிகளிலும் குடிசைகளை அமைத்து வாழும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் மத்தியில் இந்த 288 குடும்பங்களாவது பயனடைவார்களெனின் அது வரவேற்கத் தக்கதாகும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, மீளக் குடியமர்கின்ற, பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற வீடமைப்பு திட்டங்கள் மூலம் வீடொன்றை அமைத்துக் கொள்வதற்கான நிதியுதவி சொந்தக் காணியற்ற குடும்பங்களுக்கு எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றது.

பத்திற்கு அரசினாலோ, அரச சார்பற்ற நிறுவனங்களினாலோ, வெளிநாடுகளின் உதவியின் மூலமோ வழங்கப்படும் வீடமைப்பு திட்டத்தில் ஒரு பயனாளியாகும் வாய்ப்பு கிட்டுவதில்லை.

ஆனால் சொந்தக் காணியுள்ள ஒருவர் தனது பொருளாதார நிலை, குடும்ப நிலை என்பன குறித்து உண்மை தகவல்களை மறைத்து வீட்டு திட்டங்களில் பயனாளியாகும் வாய்ப்பை பெற்றுவிடுகின்றார். இதற்கு உடந்தையாயிருந்து

**வலி கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்ற வேளை ஆறு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 288 குடும்பங்களுக்கு காணி கச்சேரி நடாத்தி காணி ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டு அதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. பத்திரிகைக ளில் வெளியாகும் பல செய்திகள் போன்று இதுவும் வெறும் செய்தியாக மட்டும் இருந்து விடாமல் செயல்வடிவம் பெறுமாயின் பாராட்டுக்குரியதாகும்.**

வீடு அமைப்பதற்கான உதவி கோரி விண்ணப்பிக்கச் செல்லும் ஒருவரிடம் கிராம அலுவலர் கேட்கும் முதலாவது கேள்வி குடியிருக்கும் காணியின் உறுதி உமது பெயரில் உள்ளதா? என்பதாகும்.

இதனால், போரால் பாதிக்கப்பட்டவர்களாகவும், சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்தவர்களாகவும், நீண்ட காலத்தின் பின் மீளக்குடியமர்பவர்களாகவும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களாகவும், பெண் தலைமைத்துவத்தின் கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்களுமாக ஏனைய அனைத்து தகுதிகளும் உடையவர்களாய் இருந்த போதும் ஆயிரக்கணக்கான வறிய குடும்பங்கள் வீட்டுத் திட்டங்களுக்காக விண்ணப்பிக்கும் தகுதியை கூட இழந்தவர்களாகவே உள்ளனர்.

குடியிருக்கும் நிலமற்ற, பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள வறுமையில் வாடும் ஒரு குடும்

அரசாங்கம் தாறது தானே என சமாதானம் சொல் லும் அரசாங்க ஊழியர்கள் இல்லிடம் இல்லாத ஏழைகள், ஏதிலிகள் விடயத்தில் பாராமுகமாக இருந்துவிடுகின்றனர்.

சிறிதளவு குடியிருக்கும் நிலத்தை உடமையாக வைத்திருக்கும் அளவுக்கு பொருளாதார ரீதியாக முன்னேறியுள்ள ஒருவருக்கு வழங்கப்படும் அரசாங்கத்தின் உதவி அந்த நிலம் கூட இல்லாமல் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையிலிருப்பவருக்கு கிடைக்காமலிருப்பது குறைபாடானதெனினும் இது குறித்து யாரும் கண்டுகொள்வதாயில்லை.

காணியற்ற இந்த மக்கள் பல கட்டங்களாக வழங்கப்பட்டு விட்ட வீட்டுத் திட்டங்களில் பயன் பெற முடியாமற் போவது குறித்து இதுவரை உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் மேற் கொள்ளப்படவில்லை.

எனவே தான் இத்தகைய சட்டங்களை ஆக்குகின்ற, திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குகின்ற சபைகளில் அங்கம் வகிப்பவர்கள், அவற்றை நிறைவேற்றும் அதிகாரம் படைத்தவர்கள் யாரை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது?

இலங்கை அரசிடமிருந்து காணி அதிகாரத்தை கோருகின்ற தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் காணியற்ற இந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவும் முன்வர வேண்டும். பத்திரிகை செய்திகளில் இடம்பிடிப்பதற்காக காணி அதிகாரம் குறித்து பேசுகின்ற அரசியல் தலைவர்கள் பத்திரிகைகளின் கவனத்தை கவராத பின்தங்கிய மக்களின் காணிப் பிர்சசினை தொடர்பாகவும் பேச முன்வர வேண்டும்.

பாராளுமன்றத்தின் கவனத்தை பெறாத இந்த பிரச்சினை வலி கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முக்கியத்துவமளிக்கப்பட்டு பேசப்பட்டிருப்பது மெச்சத்தக்கது. ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலும் இவ்வாறு நிலமற்ற வறிய மக்கள் பயன்பெறும் வகையில் காணிக் கச்சேரிகள் நடைபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பல தலைமுறைகளாக புறம்போக்கு நிலங்களிலும், பராமரிப்பின்றியிருக்கும் தனியார் காணிகளிலுமே குடியிருக்கும்; அன்றாட உழைப்பில் சீவியம் நடத்தும் வறிய மக்களின் நிலமற்ற பிரச்சினை ஒரு சமூகப் பிரச்சினை என்பதை கவனத்தில் எடுத்து தீர்வுகாண்பதற்கு, கட்சி பேதங்களை மறந்து அரசியற் தலைமைகளும் குரல்கொடுக்க முன்வர வேண்டும்.

இதுபோன்ற ஐக்கியப்பட்ட நடவடிக்கைகள் மூலமே காணி அதிகாரம் கோரும் தமிழர் தரப்பு கோரிக்கை அர்த்தமுள்ளதாகும்.

## தோழர் பத்மநாபா பிறந்த....

1 ம் பக்கத் தொடர்ச்சி

சகல விதமான ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து, நீதியான, பாரபட்சமற்ற சமூக அமைப்புக்காக பாடுபட்டவர். தனது மாணவப் பருவத்திலிருந்து உயிர் துறக்கும் வரை இந்த இலட்சியங்களுக்காக அயராது உழைத்தார். அவரது எந்த ஒரு நடவடிக்கையிலும் மனிதாபிமானம் உயர்ந்திருந்தது.

தனிநாடு என்ற இலட்சியத்தை அடைவதற்காக போராடுபவர்கள் எத்தகைய தவறான பாதையில் சென்றாலும் சரியான இலக்கை அடைந்தால் சரி என்ற சிந்தனை மேலோங்கிய ஓர் நிலைமை உருவாகியிருந்தது.

தமது நிதித் தேவையை பூர்த்தி செய்ய போதைவஸ்து கடத்தல் போன்ற குறுக்கு வழிகளை ஆயுதந் தாங்கிய இயக்கங்கள் மேற்கொண்ட போதும் தோழர் பத்மநாபா அவற்றை மனித குலத்துக்கு விரோதமான நடவடிக்கைகள் என முற்றாக எதிர்த்தார். சிங்கள மக்கள் மத்தியில் கூட அவை விற்பனை செய்யப்படக் கூடாது என்பதில் உறுதியாயிருந்தார்.

விடுதலை என்பது மக்களின் சுபிட்சமான வாழ்வு என்பது சரியான மார்க்கங்கள் ஊடாகவே அடையப்பட முடியும். அடையப்பட வேண்டும் என்பதில் அமரர் தோழர் பத்மநாபா அசையாத நம்பிக்கை உடையவராய் இருந்தார்.

இலங்கையின் அனைத்து இன மக்களையும் பல்வேறு இன்னல்களுக்கும், துன்ப துயரங்களுக்கும் இழப்புக்களுக்கும் உள்ளாக்கிய பின்னர் இப்போது இன நல்லிணக்கம் பற்றி பேசப்படுகின்றது. ஆனால், இங்கு இனக்கலவரங்களால் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு, தமிழ் மக்கள் மத்தியில் சிங்கள மக்களுக்கெதிரான உணர்வு கூர்மைப்பட்டிருந்த வேளையில், ஆயுதப் போராட்டம் முனைப்பு பெற்றிருந்த காலத்தில் இன நல்லிணக்கத்தை வலியுறுத்தியவர் தோழர் பத்மநாபா, சிங்கள மக்கள் எங்கள் எதிரிகள் அல்ல எம்மை பாரபட்சமாக அடக்கியாள நினைக்கும் அரசின் போக்குக்கு எதிராகவே நாம் போராட வேண்டும் என்று அழுத்திச் சொன்னவர்.

1985 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் முதன்முதலாக சிங்கள மக்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டபோது இதனை கடுமையாக கண்டனம் செய்ததுடன் இதற்கெதிரான பிரச்சாரத்தையும் தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுத்தது தோழர் பத்மநாபாவை செயலாளர் நாயகமாக கொண்டிருந்த ஈபிஆர்எல்எவ். ஆகும். போராட்டத்தை பலவீனப்படுத்திவிடும் என்ற விமர்சனத்தையும், புலிகளின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டே ஈபிஆர்எல்எவ் இதனை மேற்கொண்டது.

தோழர் பத்மநாபா ஆயுதந் தாங்கிய இயக்கங்களிடையே ஐக்கியம் அவசியம் என்பதை நன்குணர்ந்திருந்தார். இயக்கங்களிடையே ஐக்கியத்தை உருவாக்குவதற்கு முன்னின்று செயற்பட்டார்.

தமிழ் மக்களின் நலன் குறித்து பேசிய, ஆயுதம் ஏந்திப் போராடிய அனைத்து இயக்கங்களின் தலைவர்களையும் மதித்த தோழர் பத்மநாபா பெரிய இயக்கம் சிறிய இயக்கம் என்ற பேதமில்லாது அனைவரும் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும் என்று உண்மையாகவே விரும்பினார். ஆனால், போராட்டத்தின் நலன்களுக்கு, மக்களின் நலன்களுக்கு மாறாக செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவற்றைச் சுட்டிக்காட்டவோ, கண்டிக்கவோ பின்நிற்கவில்லை.

ஆயுதந் தாங்கிய இயக்கங்களின் தலைவர்களை மட்டுமல்ல ஆயுதப் போராட்டத்தை நிராகரித்த கட்சிகளின் தலைவர்கள் மீதும் அவர் மரியாதை கொண்டிருந்தார் அவர்களின் பங்களிப்புக்களை மதித்தார். இலங்கையிலும் இந்தியாவிலும் அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களுக்காக உழைத்த பல்வேறு தரப்பினரையும் அவர் நேசித்தார். அவர்களுடன் நட்புக் கொண்டிருந்தார், கூட்டாக செயற்பட்டார்.

1984 ஆம் ஆண்டு ஆயுதந் தாங்கி போராடிய ரொலோ, ஈரோஸ் ஆகிய இயக்கங்களுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ் வும் இணைந்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்ற பெயரில் ஐக்கிய முன்னணி உருவாவதற்கு தோழர் பத்மநாபா காத்திரமான பங்களிப்பை வழங்கியவர். பின்னர் 1985 இல் புலிகளும் இந்த ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயற்படுவதில் ஈடுபாடு காட்டியவர் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்துக்கொண்டே புலிகள், 1986 இல் ரெலோ இயக்கத்தின் மீது தாக்குதல் நடாத்தியதை தொடர்ந்து இந்த ஐக்கிய முன்னணி உருக்குலைந்து போனது.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் இடதுசாரிகளுடனும், தென்னிலங்கை முற்போக்கு சக்திகள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் தமிழ் இயக்கங்கள், கட்சிகள் என பல்வேறு தரப்பினரோடும் ஐக்கியப்பட்டு செயறபடுவதற்கு முக்கியத்துவமளித்தார். மாகாண சபையின் உருவாக்கத்திலும், அதன் செயற்பாட்டிலும் பலரையும் பங்காளிகளாக ஆக்கிக் கொண்டார். ஐக்கியததிற்கான அவரது முயற்சிகளில் போலிததனம் கிடையாது.

வடக்கு கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டதை தொடர்ந்து 1989 இல் இடம் பெற்ற பாராளுமன்ற தேர்தலில் அ.அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து அக்கட்சியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட முன்வந்தார். இத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட திரு.அ.அமிர்தலிங்கம் தோல்வியை தழுவிய போதும் யாழ் மாவட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட தோழர். கந்தையா நவரட்ணம் இந்த தேர்தலில் யாழ்மாவட்டத்தில் வெற்றி பெற்ற மூவரில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நடவடிக்கைகள் அனைத்திற்கும் கட்சியின் சார்பில் மூலகாரணமானவராயிருந்த போதும் இந்த அமைப்புக்களில் எந்த ஒரு பதவியையும் தனதாக்கிக் கொள்ள தோழர் பத்மநாபா முயலவில்லை. ஒற்றுமையின் பேரால் சம்பந்தப்பட்ட கட்சிகளை சிதைக்கும் சதி முயற்சிகளில் ஈடுபட்டதில்லை. அக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வலைவிரிக்கும் விலைக்கு வாங்கும் கபடநோக்கத்துடன் செயற்பட்டதில்லை. இத்தகைய இழிவான அரசியல் பண்பாட்டை வளர்த்த அவப் பெயரிலிருந்து அவர் தன்னை விலக்கிக் கொண்டார்.

இப்போதும் ஒற்றுமை பற்றி தமிழ் கட்சிகளின் தலைவர்கள் பலர் பேசி வருகின்றார்கள். மேடைகளிலும், ஊடகங்களிலுமே இது பற்றிய அவர்களின அக்கறையை கண்டுகொள்ள முடிகின்றது.

கட்சிகளின் தலைவர்கள் சிலர் ஒற்றுமை என நினைப்பது, தமது கடசியின் வேலைத்திட்டஙகளை இதர கடசிகளின் உறுப்பினர்கள் சேர்ந்து செய்வதை போலும். இணைந்து பணிபுரிவது என்று அவர்கள் கருதுவது அவர்களுக்கு அல்லது அவர்கள் நிறுத்தும் வேட்பாளர்களுக்கு ஆதரவளிப்பதை, பிரச்சாரம செயவதை தானா என்று எண்ணத் தோன்றுகின்றது.

மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான கூட்டுச் செயற்பாடு மக்கள் நலனை முன்நிறுத்தும் பொதுவான வேலைத்திட்டம என்பன ஐக்கியப்படுகின்ற கடசிகளுக்கு அவசியம் என்பது இவாகளுக்கு உண்மையில் புரியவில்லையா புரியாதது போல பாசாங்கு பண்ணுகிறார்களா என்று தெரியவில்லை.

சக கட்சிகளின் இருப்பை அக்கட்சிகளின் சுய அடையாளங்களை சிதைக்கும் ஐக்கியம் ஐக்கியமாகாது.

புலிகள் துப்பாக்கி முனையில் ஏனையோரது பங்களிப்புக்களை நிராகரித்தனர். தாமே ஏக பிரதிநிதிகள் என்ற அதிகாரத்தை நிறுவ முனைந்தனர். அதற்கேற்றவாறு ஏனையோரை துரோகிகள், துணைப்படைகள், கைக்கூலிகள் என்று நாமம் சூட்டி ஒதுக்கிவைத்தனர். புலிகளின் பாணியில் இல்லாவிட்டாடாலும் அதே செயற்பாடுகள் தொடர்கின்றன. இந்த நிலை இனியாவது மாற வேண்டும்.

தோழர் பத்மநாபா வாழும் காலத்தில் அவருடைய பிறந்தநாளை நாம் கொண்டாடியதில்லை. அவர் உயிர்நீத்த பின்னர் அவரது பிறந்தநாளை நினைவு கூருகின்றோம். உயிர்வாழும் ஒருவரது பிறந்த நாளில் அவர் பல்லாண்டு வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம். அமரர் தோழர் பத்மநாபாவின் பிறந்த நாளில் அவரது சீரிய சிந்தனைகள், உன்னத குறிக்கோள்கள் வெற்றி பெறவேண்டும் என வாழ்த்துவோம். அத்தகைய பணியில் ஈடுபட்டிருப்பவர்களை வாழ்த்துவோம். அவர்களோடு கைகோர்த்துச் செயற்படுவோம்.

padippakam

www.padippakam.com






# மனதிலிருந்து...

**ஸ்ரீதரன் - சுகு**

இயல்பாக இருக்க வேண்டும் என்பதற்காக திரும்பவும் வாசிக்காமல் அது மனதில் ஏற்படுத்தியிருந்த தாக்கத்தில் இருந்து எழுதுகிறேன். வாசித்து ஒரு மாதத்திற்கு மேல்.

அதற்கு சில நாட்களுக்கு முன்னர் டால்ஸ்டாயின் போரும் அமைதியும் (சொக்கலிங்கம் அவர்களின் மொழிபெயர்ப்பு 1956) புத்துயிர்ப்பு ரா. கிருஸ்ணையாவின் மொழிபெயர்ப்பு திரும்பவும் வாசித்திருந்தேன்.

சிறைகளிலும் சித்திரவதை முகாம்களிலும் கொடுமைகள் வெவ்வேறு காலங்களில் அவ்வளவு வித்தியாசமில்லாமல் தான் இருந்திருக்கின்றன.

டால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு நாவலில் மாஸ்லாவா என்ற வஞ்சிக்கபட்ட அப்பாவிப் குடியானவப் பெண் அனுபவிக்கும் கொடுமைகளினூடான யாத்திரை அமரத்துவமாக பதிவுசெய்யப்பட்டிருந்தன. இன்றளவும் உலகளாவிய அளவில் இந்த யாத்திரைகள் தொடாந்து கொண்டேதான் இருக்கின்றன.

நாஜி"கெஸ்டபோ"சிறையில் செக்கோசலவாக்கிய கம்யூனிஸ்ட் யூலியஸ் பூசிக்கின் அனுபவங்கள் துக்குமேடைக்குறிப்பாக வெளிவந்தது.

நாஜி சிறையில் கொல்லப்பட்ட அன்னி பிராங் என்ற யூதச் சிறுமியின் டயறியும் (வதைமுகாம் செல்ல முன்னரே குடும்பம் தலைமறைவாக வாழந்தபோது எழுதப்பட்டது) அமரத்துவம் ஆனது ஒவ்வொன்றும் வெவ்வேறு சமூக, நாட்டு, கால சூழலின் பிரத்தியேக தன்மையைக் கொண்டிருந்தாலும் இவற்றிடையே அதே பொது இயல்புகள் இருக்கின்றன. இவை மனித வாழ்வின் அறம் பற்றியது.

இவை ஏற்படுத்திய பாதிப்பிற்கு எந்தளவும் குறையாத பாதிப்பை புஸ்பராணி அவர்களின் புத்தகம் ஏற்படுத்துகிறது

எமது நாட்டில் ஒருகாலத்தில் (இன்று இன்னும் பயங்கரம்) சட்டம் ஒழுங்கு? துறையின் நிர்வாணம், அதிகார அகங்காரம் தோலுரிக்கப்பட்டுள்ளது. தமிழ் பொலிஸ் அதிகாரிகள் சொல்லவே தேவையில்லை. வதை முகாம்களில் மனிதம் மதிப்பிழந்து போனதை; மனித சுயமரியாதை, கௌரவத்திற்கு விடப்படும் சவாலை இவை பதிவு செய்திருக்கின்றன. இன்று இவை நவீன வடிவங்களைப் பெற்று மெருகேறியுள்ளன.

**டால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு, யூலியஸ் பூசிக்கின் துக்குமேடைக்குறிப்பு, அன்னி பிராங் என்ற யூதச் சிறுமியின் டயறி இவை ஏற்படுத்திய பாதிப்பிற்கு எந்தளவும் குறையாத பாதிப்பை புஸ்பராணி அவர்களின் புத்தகம் ஏற்படுத்துகிறது**

சிறப்பான மொழி நடையில் சாதாரணமாக "நச்சென்று" புரியக் கூடிய விதமாக புஸ்பராணி இதனை எழுதியுள்ளார்.

டால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு மாஸ்லாவா 19ஆம் நூற்றாண்டு முற்பகுதி சிறைகளில் அனுபவித்த துயரங்களை விட புஸ்பராணி கல்யாணி போன்றவர்கள் 20 ஆம் நுற்றாண்டின் பிற்பகுதியில் அனுபவித்தவை ஒரு கண்ணோட்டதில் மிகக் கொடுமையானவை.

யுத்தமும் வன்முறையும் என்றாகிவிட்ட சமூகத்தில் பெண்கள் எதையெல்லாம் அனுபவிக்க வேண்டி வருகிறது.மொழி, இனம் கடந்து இவை நடைபெறுகின் றன. ஜேவிபி பெண்கைதிகள் மற்றும் சாதாரண கைதிகள் தொடர்பான அவரது பதிவு இதனை பிரதிபலிக்கிறது. அதலி நட்புணர்வும் இணக்கமும் தெரிகிறது

அவர் பிரதானமாக 70 களிலும் 80 களின் முற்பகுதியிலும் நிகழ்ந்தவற்றை பதிவு செய்துள்ளார்.

எமது அரசியல் சூழல் அதன் போதாமை, போலித்தனம் எல்லாவற்றையுமே அது வெளிச்சம் போட்டுகாட்டுகிறது.

இந்த பதிவு இப்படி இருக்குமானால் நாம் கடந்து வந்த 30 வருடங்களில் எத்தனை ஆயிரக் கணக்கான அதிர்ச்சிகள் பதிவு செய்யப்படாமல் இருக்கின்றன.

மனித குலம் இழிவுபடுத்தப்படுவதை அவமானப்படுத்தப்படுவதை இரத்தமும் சதையுமாக "அகாலம்" உணர்த்தி நிற்கிறது.

"அகாலம்" என்ற தலைப்பே மனதில் ஆழ் துயரை ஏற்படுத்துகிறது. அனுபவமில்லாதவர்களுக்கு தனித்து அது வெறும் சொல் அர்த்தமாகவே இருக்கும். என்னைப் பொறுத்தவரை அந்த மொழியை வலியைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த அகாலத்தின் நீட்சி தான் அவசாகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், இனக் கலவரங்கள், நூல்நிலைய எரிப்பு, பழையசந்தை எரிப்பு, படுகொலைகள் - அரச பயங்கரவாதம்

எமது நிறுவனங்கள் எமது சமூக அமைப்பு தீவிர மாற்றங்களுக்குள்ளாக வேண்டியிருக்கிறது.

இதே மாதிரியாக குரோதமும் வக்கிரமும் கொண்ட அதிகார வர்க்கம் இன்று இலங்கையில் விரிவாக்கம் பெற்றிருக்கிறது. தமிழர்கள் மத்தியில் இருக்கிறது. முக்கியமாக யாழ்ப்பாண (தமிழ்) பொலிஸ் எப்படி இருந்தது அது தேசிய ஒடுக்குமுறையில் மாத்திரமல்ல. 60களில் சாதி ஒடுக்குமுறைக்கு எதிரானபோராட்டங்களில் ஆதிக்கசாதியினரின், அதிகாரவர்க்கத்தினரின் கைக்கருவியாகவே இருந்தது

வருங்காலத்திலும் பொலிஸ் மீண்டும் பாரதூரமான பிரச்சனைகளை உருவாக்கும் என்தபதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாகவே இருக்கின்றன? ஏனெனில் கடந்தகாலச் செயற்பாடுகள் பற்றி விசாரணைகளும் இல்லை புதிய சீர்திருத்தங்களும் இத்துறையில் இல்லை.

தமிழ் தேசிய இயக்கம் அற உணர்வுகளுக்கெதிராக மாறிய அதன் போலித்தனம் சகோதர படுகொலைகளாக மாறியது பற்றிய ஏமாற்றம் விரக்தி அங்கங்கே பிரதிபலிக்கிறது. எங்கெங்கு கோளாறுகள் இருந்தன என்பதை அறிவதற்கும் இது ஓரளவு உதவும்.

வக்கிரமும் குரூரமும் நிறைந்த இந்த சூழல் மாறவேண்டும்.

சொந்த பொது வாழ்க்கையில் தான் அனுபவித்தவற்றை குறித்த அவரது எழுத்து ஒரு காலத் துயரின் குறியீடாக அமைகிறது. அர்ப்பணிப்புகள் எல்லாமே அவமாய்ப்போன வெறுமை தெரிகிறது.

உண்மையில் ஈழப்போராட்டத்தில் பெண்கள் முதன்மையானவர்களாக எப்போதும் இருந்ததில்லை. அவர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். அவ்வளவு தான். அந்த வகையில் இதுவும் ஒரு ஆழுமையின் குரல்.

உண்மையில் பிரதானமாக இது தமிழ் தேசிய ஆண்களின் போராட்டம் என்றே மனங்கொள்ளப் படலாம் .

முன்னரும் போராட்டத்தின் போதும் பின்னரும் பெண்களுக்கான தீர்மானிக்கும் இடைவெளி கேள்விக்குரியது.

இந்த புத்தகம் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

ஏனெனில் அற உணர்வு பற்றிய கேள்வியை இத்தகைய பதிவுகள் தான் நெற்றிப் பொட்டில் அடித்தது மாதிரி எழுப்புகின்றன.

வடக்கிலும் சரி தெற்கிலும் சரி மனிதத்தை இழிவு படுத்தும் அதிகார அகங்காரம் அகல வேண்டும். சுதந்திரம், மனித கௌரவம் என்பன நிகரற்றவை.

புலம் பெயர் அனுபவம் சூழல் அவரது பார்வையை விசாலிக்கச் செய்துள்ளது. ●

# விபத்துக்களிலிருந்து விடுதலை எப்போ?

நாளாந்தம் உயிரிழப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருந்த ஆயுத மோதல் முடிவுக்கு வந்து விட்ட நிம்மதியோடிருந்த மக்களை கவலை கொள்ள வைத்திருக்கின்றன பெருகிவரும் வீதி விபத்துக்கள். யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல நாட்டின் இதர பகுதிகளிலும் விபத்துக்கள் அதுகரித்துவிட்ட கவலை காணப்படுகின்றது.

நாடு முழுவதும் நாளாந்தம் 110 வரையான விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் இந்த விபத்துக்களால் தினசரி 6 - 7 பேர் வரை இறக்க நேரிடுவதாகவும் போக்குவரத்து பொலிஸாரின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வருடம் செப்டம்பர் 31 வரையான 9 மாதங்களில் 1700 பேர் கொல்லப்பட்டிருப்பதுடன், 3699 பேர் கடுமையான காயங்களுக்கும் 9961 பேர் சாதாரண காயங்களுக்கும் உள்ளாகியிருப்பதாகவும் பொலிஸ் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குடாநாட்டு மக்களை, இப்போது தான் இந்த ஆபத்து நெருங்கி வந்திருக்கிறது. யாழ் குடாநாட்டில் வாகனங்களின் பாவனை அதிகரித்திருப்பதுடன், வாகனங்களை வேகமாக செலுத்தத்தக்க வகையில் வீதிகளும் புனரமைக்கப்பட்டுள்ளன. எனவே விபத்துக்களுக்கான வாய்ப்பு அதிகரித்திருப்பது உண்மை. ஆனால், பெருகியுள்ள வாகனங்களின் பாவனையும், புனர் நிர்மாணம் செய்யப்பட்டு காணப்படும் வீதிகளும் மட்டுமே விபத்துக்கள் அதிகரிப்பதற்கு காரணம் இல்லை. அதற்கு அப்பாலும் உயிரிழப்புக்களையும், உடல் ஊனத்தையும் ஏற்படுத்தும் விபத்துக்களுக்கான காரணங்கள் நெடுஞ்சாலைகள் போல் நீண்டு கிடக்கின்றன.

சாரதிகளின் தவறுகள், வாகனங்களில் காணபடும் குறைபாடுகள், சீரற்ற வீதிகள், பாதசாரிகள், துவிச்சக்கரவண்டி பாவனையாளர்களின் கவலையீனம் மற்றும் ஒழுங்கற்றமுறையில் வீதிகளை கடத்தல், வீதிகளில் அலைந்து திரியும் விலங்குள், சமிக்ஞைகளை (சிக்னல்) செயற்படுத்த அல்லது கவனிக்கத் தவறுதல் என காரணங்கள் பலவாகும்.

இல்லாமல் இருப்பதும், குறைபாடுகளுடனிருப்பதும் விபத்துக்களுக்கு காரணமாயிருந்துள்ளன. யாழ் மாவட்டத்திலேயே உயிரிழப்புக்களையும் கூட ஏற்படுத்தியிருக்கின்றன.

யாழ் குடாநாட்டில் மேடு பள்ளங்கள், குண்டு குழிகள் நிறைந்த வீதிகள் சிறிய விபத்துக்களுக்கு காரணமாயிருந்த அதேவேளை வேகத் தடைகளாகவும் இருந்திருக்கின்றன. இந்த நிலைமாறி அகன்ற புதிய காப்பெற் வீதிகள் வாகனங்களின் வேகத்தை பல மடங்கு அதிகரிக்க வாய்ப்பாய் உள்ளன. எனவே, இவ் வீதிகளில் குறுக்கீடுகள் தோன்றும் போது விபத்துக்களில் முடிகின்றன. இந்த மாறுதல்களை கவனத்திற் கொள்வது விபத்துக்களிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கு அவசியமாகும்..

போக்குவரத்து பிரவு பொலிஸார் வாகனங்களின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு நகர மையங்களில் கடமைபுரிகின்றர். இதன் மூலம் போக்குவரத்து இலகு படுத்தப்படுவதுடன் விபத்துக்களும் தவிர்க்கப்படுகின்றது என்பதை மறுப்பதற்கில்லை. வாகனங்களின் வரி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம என்பவற்றை பரிசீலிப்பதில் தீவிர கவனம் செலுதும் போக்குவரத்து பொலிஸார் வீதிகளில் போக்குவரத்து ஒழுங்குக்கு மாறாக வாகனங்களை செலுத்துதல், எல்லை மீறிய வேகம் என்பவற்றை கட்டுப்படுத்துவதில் வெற்றி பெறவில்லை.

அரச பேருந்துகள் மற்றும் சக தனியார் பேருந்துகளுடன் பயணிகளை ஏற்றுவதற்காக போட்டிபோட்டு செல்லும் தனியார் பேருந்துகள் பல விபத்துக்களில் சிக்கி பாரிய அனர்த்தங்களை விளைவித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான எந்த நடவடிக்கையையும் எந்த தரப்பும் எடுக்கவில்லை என்பது பொதுமக்களின் குற்றச்சாட்டாக உள்ளது.

பார ஊர்திகளும், தனியார் பேருந்துகளுமே இதர வாகனங்களுடன் ஒப்பிடும் போது அதிகமான விபத்துக்களுக்கு காரணமாயுள்ளன என்பது புள்ளி விபரங்கள் மூலம் நிருபணமாகியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.




சாரதிகளின் அனுபவக் குறைவு, அதிக வேகம், மது போதையில் வாகனம் செலுத்துதல், தூக்க கலக்கம் ஆகிய சாரதிகளின் குறைகள் மற்றும் நடத்தைகளாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் இல்லாத சாரதிகளும், 3 வருடத்திற்கும் குறைந்த அனுபவம் மட்டும் உள்ள சாரதிகளுமே இடம்பெறும் விபத்துக்களில் சுமார் அரைப்பங்கு விபத்துக்களுக்கு காரணமாயுள்ளனர்.

2011ம் ஆண்டு இடம்பெற்ற 2211 விபத்துக்கள் மது போதையில் வாகனம் செலுத்தியமையால் ஏற்பட்டவையாகும். இந்த விபத்துக்களால் 168 பேர் உயிரிழந்துள்ளனர்.

வளைவுகளிலும், வேகமாக முந்திச் செல்ல முற்படும் போதும 25 வீதத்துக்கும் அதிகமான விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

புனரமைக்கப்பட்ட வீதிகளே விபத்துக்களுக்கு காரணம் என்று கூறுகின்ற பலர் குண்டும் குழியுமான வீதிகள் விபத்துக்களுக்கு காரணமாயிருப்பதாக சிறிது காலத்திற்கு முன்னர் கூறியதை கேட்க முடிந்தது. இவர்களது தாக்குதல் இலக்கு குண்டும் குழியுமான வீதிகளோ அல்லது காப்பெற் வீதிகளோ அல்ல மஹிந்த ராஜபக்ஸவும். மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கமுமே இவர்களின் இலக்காகும். வீதிகள் செப்பனிடப்படுவது போன்று வீதிகளை பயன்படுத்துபவர்களின் நடத்தைகளும் செப்பமடைய வேண்டுமே தவிர, வீதிகளின் அபிவிருத்தி, புனரமைப்பு புறக்கணிக்கப்பட முடியாதது. அதுமாத்திரமல்ல காலத்தின் தேவையுமாகும்.

விதிகள் புனரமைக்கப்படும் இடங்களில் போதிய அபாய எச்சரிக்கைகள், இரவு நேரத்தில் தெளிவாக தெரியக்கூடிய குறியீட்டுப் பலகைகள், சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படுவதில்லை. வீதியில் வாகனங்கள் செல்லமு டியாத தடைகள் ஏற்படுத்தப்படும் இடங்களிலிருந்து போதுமான எவு தூரத்தில் எச்சரிக்கைகள் காணப்படுவ தில்லை. வீதியின் ஒரு பக்கம் வீதி திருத்தப் பணிகள் நடைபெறும் போது மறு பக்கத்தால் வாகனங்கள் இடையூறின்றி செல்வதற்கான ஏற்பாடுகள் சில இடங்களில்

பலரது உயிர்களையும், உடமைகளையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடுள்ள பயணிகள் பேருந்துகளை செலுத்தும் சாரதிகள் மாத்திரமன்றி அவற்றை இயக்குபவர்களும் பொலிஸாரும் பயணிகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்தி தேவையான முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆனால் கொழும்பு செல்லும் தனியார் பேருந்துகளில் வழித்தட அனுமதி உள்ளதா என்பதை கண்காணிப்பதிலேயே பொலிஸார் தீவிர கவனம் செலுத்துவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் நம்மவர்கள், அங்கு போக்குவரத்து விதிகளை மிகவும் அவதானமாக பின்பற்றுவதை அவர்களுடன் உரையாடும் போது உணரமுடிகின்றது. அங்கு போக்குவரத்தை கண்காணிப்பதற்காக வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள கமராக்கள் எம்மவர்களை பணிய வைக்கின்றன. போக்குவரத்து விதிகளை மீறியதாக குற்றம் சாட்டப்படுபவர் அதிக தண்டப் பணம் செலுத்த வேண்டியிருப்பதுடன் குறுக்கு வழிகளை பின்பற்றி தண்டப்பணம் செலுத்துவதிலிருந்து தப்பிக்க முடியாதென்பதாலும் வீதி ஒழுங்குகளை கடைப்பிடித்தொழுகுவதாகத் தெரிவிக்கின்றனர்.

வெளிநாடுகளிலுள்ள நவீன வசதிகள் நம் நாட்டில் பொலிஸாருக்கு கிடையாது என்பது உண்மைதான் ஆனாலும், அந்த வசதிகள் மட்டும் கிடைத்துவிட்டால் போதாது அவற்றை பயன்படுத்துபவர்கள் நடைமுறையிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டாலே பயன் பெற முடியும்.

வீதி ஒழுங்குகளை மீறும் சாரதிகள் எமது பொலிஸாரிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கான குறுக்கு வழிகளையும் தெரிந்து வைததுள்ளார்கள். இவர்கள் பொலிஸாரிடமிருநது இலகுவாக தப்பித்துக்கொண்டாலும் தங்களையும் சக மனிதர்களையும் இடருக்குள்ளாக்கும் விபத்துக்களிலிருந்து தப்பிக்க முடிவதில்லை.

பொதுமக்கள், பொலிஸார், சாரதிகள் ஆகியோரின் விழிப்புணர்வு, கடமையுணர்வு, பொறுப்புணர்வு என்பன அதிகரிக்கும் போதே அதிகரித்துச் செல்லும் விபத்துக்கள் குறைய வாய்ப்பு உண்டு.

தி. சிறிதரன் 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம் அவர்களால் இல 781, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் கங்கை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.